துப்புடன்மற் றவள் துவைக்குந் துளிதெறித்து மேற்றூவ
இப்படி நீ தப்புவது மியல்போ சொல் லெனவவளும் (யடு)

பாண்டுரங்கன் றனேவேண்டிக் காமியத்திற் பரிவுகொண்டு
வேண்டுருலத் தொழி லதனே விடுத்து நெறி தப்பியலங்
ஞண்டுருயச் சாதிகட்கு மேற்குமோ பூசையென
ஆண்டவங்கா வுனது தந்தை யழுதுவிட்ட லன்றன்னுல் (யசு)

செத்தபசுத் தனே யெழுப்பச் செய்ததுதா மியமலவோ
உய்த்துரைத்தி யெனவொருவர்க் கொருவர் மிக வாதாடி
மெத்தமுனிந் தவரவர்தம் வீடடைந்தார் காமருந்தம்
தித்தமகிழ் கோயினின்று திருமனமே வியபின்பு (யள)

ராகாகும் பார்பயந்த நற்புதல்வி யுமை மிகவும்
ஆகாத தூஷனைக ளறைந்தனளென் றவளுரைக்க
வாகான நாமதே வனுஞ் சிறிதி யோசித்தீ
மாகாள முகிலனே ..... வளர் கோயில் மீண்டெவந்து (யஅ)

நாதா நின் னடியரெனும் ராகாகும் பாருன்பால்
தோன காமியரோ நிறைந்துளநிட் காமியரோ
யாதான தவர் கருத்தை யறைதியெனப் பாண்டுரங்கன்
மேதாவி யானவன் விழைவறுநிட் காமியனே (யக)

எனாகைத்துப் புகன்றருள வெம்பிரா னவர் பெருமை
தனையெனக்குக் காட்டுகெனத் தானுருக்கு மணியுடனே
வினவியநா மகாயழைத்துக் கொடுபோந்தான் விறலேடுமை
வனமதனி னடுப்பகலில் வந்துரா காகும்பார் (உய)

மண்ணிலுயிர் மாயாமல் மற்றவர்தந் தேவியொடு
நண்ணுவதுந் தனிவிறகு நாடுவது நனிதெரியக்
கண்ணிவந்த நாமருக்குக் காட்டவுவ ரும்மிவரைப்
பண்ணுகசோ தனையென்னப் பதுமைகர கங்கணத்தை (உக)

ஒருபுறத்தில் கிடத்தியதன் மேலுலர்ந்த விறகதனை
மருவவைத்துத் தூரத்தே மறைந்திருக்க ராகாவும்
தருவிறகு தனைத்தேடி வரும்போது தாங்கண்டார்
வெருவிமிகத் தூரத்தே விலகிநிற்க வேண்டுவார் (உஉ)

விறகுடனே கங்கணத்தை மேவியதம் மனையவளுக்
கறிவுறுத்த வேதோதி தாயிற்றென்றவர் வெருவி
அறவிலகி யப்புறத்தே யகல்வதுகண் டஞ்சாமர்
நறவொழுகு துளவினனே நன்றுபணிக் தாசெய்வார் (உங)

கருணைவழி வுறுகண்ணு காருத்தா நினதடியை
மருவுறுரா காகும்பார் மன்றநிச பத்தியுளோர்
அருளுதியின் சருணவடிவதைக்காண வெனவேண்டத்
திருமருவு மணிமார்பன் சிரித்தொன்று செப்புகின்றான் (உச)

நானிந்த ராகாகும் பார் நடக்கை தனைச்சொன்ன
தானதுவோ வில்லையோ வறைதியின்ன மூங்காண
மானனியே வளதோசொல் லெனவருக்க மற்றையவர்
ஊனமிலா ராகாவுக் கொருவருநே ரின்றெனவே (உடு)

ஓவறுசீ ருருக்குமணி யொடுநாம ரொடுகூடி
மூவரும்ரா காகும்பார் மூன் வந்தங் கிருவருக்குந்
தாவிலருள் செய்து நிற்கத் தாள்பணிந்து சேவித்தார்
ஆவலுடன் ராகாகும் பார் மனைவி யுடனடைந்தே (உசு)

ராகாகும்பார் திருவடிகளேசரணம்

ஆக சரித்திரம் அ-க்கு செய்யுள் கூடிய

முற்றிற்று.

கோராகும்பார் சரித்திரம்.

சோகை மூரி லெல்லாஞ் சிறந்துள தேர டோதி
ஊதனிற் கோரா கும்பா ரொருவரில் வாழ்க்கை மேவி
நேர்தர வுண்ணும் போது நிலேகொடு கடக்கும் போதுஞ்
சார்தர விருக்கும் போதுந் தனித்தவ ரொழுமப் போதும (க)

பிரபஞ்ச விவகா ரங்கள் பேணுறு பொழுதும் பாண்டம்
திரமுறச் செய்யும் போதுஞ் சிரமந்தீர் பொழுதுந் தம்முள்
விரவுறப் பாண்டி ரங்க விமலனே யிடைவி டாமல்
பரிவுடன் றியானஞ் செய்து பசனையுஞ் செய்து வாழ்ந்தார் (உ)

ஒருபக லிவர்க்கு முன்னே பூர்தரு சேயை விட்டுப்
பருகுநீர் கொண்டு மேவப் பாரியார் போக வன்னூர்
மருவுமூற் றத்திற் சேர்த்து மண்மிதிப் பதனுட் சேர
வருமொரு சேயை நாமம் வழுத்திமெய் மறந்தா ராகி (ங)

படருமண் ணோடு சேர்த்து மிதித்தவர் பரிந்து நிற்கக்
குடமுடன் வந்த பாரி குழவியைக் காண்கி லாராய்த்
திடமுட னரிநா மத்தைச் செப்பினர் தியானக் தன்னுல்
அடையுமா னந்த பாட்ப ராயவ சத்த ராகி (ச)

மண்டனே மிதித்து நிற்கும் வல்லவர்தம்மை நோக்கிக்
கொண்டபாற் குயங்கள் பொங்கக் குழவியெங் கேயென் றேங்கி
மண்டின குருதி யோடு மண்ணோடு மிதிக்கப் பட்ட
துண்டமா முடலுங் கண்டு துணுக்கென மார்பில் மோதி (ஞ)

புவியின்மே லலறி வீழ்ந்து புறண்டழு தாகு ழந்தாய்
அவிதர லாயி னுயோ ஐயோ கொஞ்ச மேனுங்
குவிநினே வின்றிச் சேர்த்துக் குழவியை மிதித்துக் கொன்றீர்
இவிடம்விட் டெங்கே னும்போ யிறந்துநீர் படுதி ரென்றூர் (ட)

மனேவியார் கடின வார்த்தை வழங்குதல் கேட்டுச் சற்றே
நினேவுவந் தெனதுள் ளத்தே நிலேத்தவை குந்த காதன்
றனேவிகா தஞ்செய் தேநீ தவிர்த்தனே யன்றே வென்று
சினமிகத் தண்டங் கொண்டு தேவியார் தமைய டிக்க (ண)

அருகுறும் போதி லென்னே யழகிய விடலனுணே
மருவுறத் தீண்டல் செய்யா திருக்கநீ ரென்ற வார்த்தை
வெருவுறுத் திடக்கேட் டாங்கே விரைவிலர் பொறுத்தி ருந்தார்
தெரிவுற லாகி பூரார் திரண்டனர் வந்து கண்டார் (அ)

சேற்றிலே குழந்தை சாவச் செய்ததென் வந்து பார்த்தோம்
கூற்றெனக் கோரா கும்பார் குழவியைக் கொல்வ தான
மாற்றரு வெறியெவ் வாறு வந்ததோ வெண்பார் சில்லோர்
தோற்றின னுனக்கு நன்றே பதியெனச் சொல்வார் சில்லோர் (க)

அரிதினே வாயி லேது மறிவின்றிச் செயுமோ வென்பார்
தெரிவுறு சில்லோ ரென்ப திவையெலாஞ் செவியி லேறூர்
விரிமுகச் சீய நோக்கி வெறுத்தநாய் குரைத்தல் கேளாப
பரிசெனக் கோரா கும்பார் பாண்டுரங் கனைச்சிந் தித்து (எ)

பசனைசெய்திருக்க மற்றை நாளந்தப் பாரி யாரோ
நிசமுற மனத்தி லுன்னி நேசமெய்ப் பதிக்குநேரே
வசையுறப் பேச லான வார்த்தையை மகிழ் நருக்கு
நசையுறத் தாள்வி ளக்கப் புனல்கொடி நண்ண வந்தார் (ஏக)

கண்டகோ ராகும் பார்பின் னிகழ்ந்தன கருதி மின்னே
பண்டரி நாதனணை பகர்ந்தனை தொடக்கூ டாதென்
றுண்டது விருக்கத் தீண்ட லுறுவதோ வெனக்க டித்தார்
அண்டிய மனைவி யாரு மகவின்மே லாசை யாலே (ஏ)

மற்றொரு மணஞ்செய் தேனும் பதிக்குநன் மகவுண் டாகப
பெற்றுறத் தந்தை தாய்வாழ் பெருமனைக் கேகி யன்னா
நற்றுற வணங்கித் தன்னை நாதனா மறத்து நின்ற
பெற்றியால் பிள்ளை வேண்டி ப பின்னவட் டருகவென்றார் (ஐ)

நன்றென வவரு நோந்து நல்லாள் கருதிப்பினனை
மன்றலர் குழலி னனை மணஞ்செய்து கொடுக்கும் போது
நின்றகோ ராகும் பாரே நீரிந்த மூத்தாளான
பொன்றளிர் மேனி யானைப் போலிவ டனையும் போற்ற (ஒ)

வேண்டுமென் றுறவி னோர்கள் விருபுற வழங்கப் பின்பு
பூண்டகோ ராகும் பார்முன் போற்றிய விரதம்போற்றித்
தீண்டிலர் இனையார் தம்மைத் தேர்ந்தினை யவரக் காட்டி
மூண்டது நினக்கெவ் வாறே வெனக்கதே முடிந்த தென்றார் (ஐஇ)

பின்னவ ருரைப்பக் கேட்ட பெரியவ ரவரைத் தேற்றி
நன்னரந் நாளி னேரு நடுநிசி நாதர்தூங்கு
மன்னிய வணையிற் சார வந்திரு புறத்துந் தூங்கத்
துன்னினர் தாமுங் கூடத் துயில்பவர் கைக ளேக்கி (ஐஈ)

இருவரு மிரண்டு மார்பு மேற்றின ரிருக்க வன்னர்
திருவிழி மலர்ந்து நோக்கித் தீர்ந்ததே விரதந் தீண்டி
யிவையர் தம்மை யென்ன வருவருத் தியில்வா ளாலே
ஒருகையைத் துணித்து மற்றை யொருகையை வாள்வா யுன்றி (ஐஎ)

துணித்தன ரிருக்கக் கண்ட தோகைய ரிருவர் தாமும்
மணத்தது சேய்வேட் டன்ரே வாய்ந்தது கைபோ தற்கோ
புணர்ப்பதிங் கினியென் னேயென் றலறினர் புலம்பி நைந்து
கணித்துநங் குடும்ப மெங்ங னடக்குமென் றழுதல் கண்டு (ஐஅ)

அன்பனா யாதரிப்போ ளுறியபாண்டி ரங்கன்
இன்பொடு துணைசெய்வா னுயிருக்கமற் றென்னே நீவீர்
துன்புறு கின்ற தென்று துணைசெய்விட் டலன்ற னுமம்
என்புதா மமிர்தந் துய்த்தா லெவ்வகைப பிணியு நீங்கும் (ஐக)

என்றவர் தம்மைத் தேற்றி யிணையிலாக் கோரா கும்பார்
நன்றரி பஜனை கூறி நண்ணுநா ளாடி மாதந்
துன்றெகா தசியிற் பாண்டு ரங்கனைத் தொடர்ந்து சேவை
மன்றவா னந்தங் கொண்டு மனைவிய ரோடு வந்தார் (உடு)

சுந்தர பாகை யென்னுந் தடநதி தன்னி லாடி
மூந்து புண்டலிகர் தம்மைத் தொழுதனர் முழுதும் வாழ்த்திச்
சுந்தர விமல ளுளந் துலங்குபண் டரியைச் சூழ்ந்து
வந்துறு கோயில் மேவி மாதவன் றனைச்சே வித்து (உக)

தழுவினர் தொழுது நிற்கத் தவலறு நாமதேவர்
குழுவொடு தாளம் வீணை மிருதங்க முதல கூட
வெழுமொலி யோடு கையி லுவணநன் கொடியை யேந்தி
நழுவலில் பாண்டு ரங்க ணமகீர்த் தனங்கள் பாடி (உஉ)

ஆடின ரதனைக் கண்டு தாமுந்த மங்கைத் தாளம்
போதெ லொடுசே வித்தல் பொருந்தமுன் கரங்க ளின்றி
வாடின ரிகா மத்தை வழுத்தினர் நாணிக் கைகள்
மூடினர் நினைவு கண்டு முகுந்தனும் பாண்டு ரங்கன் (உங)

முன்புள படிக்குக் கைகள் முனைத்திட வருளிச் செய்ய
அன்பொடு கைகள் கொட்டிப் பாடினர் தொழுதா ராடி
இன்புறு தலையெல் லோருந் தெரிந்தனர் வியந்து நோக்கி
மன்பர வசத்த ராகி மருவுகோ ராகும் பாரை (உச)

தொண்டரிற் பெரிய ரென்று நோத்திரம் பலவுஞ்சொல்லி
மண்டினர் கண்டு மூத்த மனைவியார்மலர்க்கை கூப்பிப
பண்டரி நாதா பத்த பாலன பதும நாபா
தண்டுள வணிந்த தாமோ தரவெனத் தொழுதுவாழ்த்தி (உஞ)

கைவர வன்பருக்குக் கருணைசெய் கமலக் கண்ணு
மைவரு மேனி மாயா மகவின்றி வருந்து கின்றேம்
நைவது தெரிந்தி லாயோ நங்கண்மேற் கருணை யின்றே
சைவலம் பொருவுங் கூந்தற் ரூமகாக் கிழத்தி யேயா (உசு)

என்றுளத் தழுங்க லோர்ந்தா னிந்நிரை கொழுந னுங்கு
நன்றருள் புரியப் பிள்ளை நகழ்ந்துமுன் வருதல் கண்டு
பொன்றின பிள்ளை யென்னே பிழைத்தது புதுமை யென்னத்
துன்றின தாய்கண் டோடித் துணைமலர்க் கரத்தி னேந்தி (உஎ)

மார்பிடை யணைத்துமேன்மேல் மகிழ்வுகொள்பொழுது மாயோன்
சீர்பெறத் தோன்றிக் கோரா கும்பாரைத் தெரிய நோக்கி
வார்குழ லிருவ ரோடு மகிழ்ந்தினைந் தின்று தொட்டுச்
சார்தரல் வேண்டு மென்று தகையறப் புணர்வு தந்தான் (உஅ)

அன்னதோர் புதுமை யெல்லா மறிந்தசே ரன்பர் யாரும்
பன்னுதோத் திரங்கள் செய்து பணிந்தனர் பாடி யாடி
மன்னினர் மங்க ளார்த்தி மகிழ்ந்தனர் புரிந்து வாழ்த்தித்
துன்னுறக் கோரா கும்பார் தொண்டைநா நோக்கிச் சொல்வார் (உசு)

அன்பர்நீ ரில்லாருஞ்சேர்ந் தடியனே னகத்து மேவி
இன்புறு கருணை செய்ய வேண்டுமென் றிரந்து வேண்டத்
தன்புறு தொண்ட ரில்லா னன்றெனத் தொடர்ந்து போந்து
முன்பவ ரிருக்கு மில்லின் முயங்கினர் கோரா கும்பார் (கூ)

பாத பூசனையே யாதிப் பண்பெலாம் பண்ணித் தக்க
வாதனங் கொடுத்தெல் லோர்க்கு மமைந்தபி னறுசு வைத்தா
மோதன் மருத்தி மற்று முளவுப சார மெல்லாங்
தீதற வியற்றி யாவுந் திர்ந்தபின் ஞான தேவர் (கூக)

நீரிவ ணுய்த்தல் செய்ய நிரம்பின ரான பாண்டத்
தோர்தரல் வேண்டுஞ் சுட்ட துஞ்சுடா ததுமென் ரோத
கோர்தரக் கோரா கும்பா ரொழுந்துகை நிலைத்தண் டத்தால்
ஓரொரு வாயுங்கொட்ட வுதைத்தில ரிருப்ப நாமர் (கூஉ)

தலையிலுந் தட்ட வந்த போதவ ரைத்த டித்த
நிலையிலே பச்சைப் பாண்ட மிவரென நின்று காக்கச்
சிலையிலேய் புருவ முத்தா பாயியுஞ் செப்பு கின்ரூர்
உலகிலீ ருமக்கெவ் வாறு தோற்றிய தண்மை யென்று (கூக)

மிகவும்வல் லீரொன் ரோத வினவினர் தாமெல் லோரு
நகைசெய நாம தேவர் நாணின ரொழுந்து நாதன்
அகமகிழ் கோயின் மேவி யலர் மகள்கேள்வன் றன்னே
முகமலர் பொலியக் கண்டு கண்களீர் மொய்ப்ப நின்று (கூ)

எனக்கவ மான மின்று நேரிட்ட விதனுல் மிக்க
மனத்துய ரடைந்த தென்ன மாதவன்றழுவிக் கொண்டே
உனக்கியா ரேது செய்தா ருற்றதென் னுரைத்தி யென்னத்
தனக்குநே ரிட்ட தன்மை சாற்றுவார் நாம தேவர் (கூடு)

இன்றுநின் கோரா கும்பா ரெங்களைக் கூப்பிச்சென் றில்லில்
நன்றண வளித்தி யார்க்குநன்குற வமைத்துத் தண்டம்
தன்றிருக் கரத்தா லேந்தித் தலைதொறும் புடைக்க யாரும்
ஒன்றையு முரைக்கா துற்ரு ரோங்கின ரென்கம் மீது (கூஅ)

அதுகண்டு வீமங் கொண்டே யங்கையாற் றடிக்கத் தாசர்
இதுபச்சைப் பாண்ட மென்ன யாவரு நகைக்க லுற்ரூர்
விதுமுக முக்தா பாயி மிக்களைப் பகிடி செய்தார்
கதுமென வெழுந்து நின்பாற் கழறிட வந்தே னென்ரூர் (கூஎ)

திருமக ணுதன் கேட்டுச் சிரித்துநீ யுபதே சத்தைக்
குருவையிற் பெரும பெற்றி குறித்தன்பர் குழாத்து ணோர்ந்து
தெரிதரக் கோரா கும்பார் செப்பிய தண்மை யென்னப்
பரிவுறு நாம தேவர் பகவருவான் ரொடங்கி ரூரே (கூஅ)

பண்டரி நாதா வென்றன் பரிபவ மெல்லா நின்பால்
விண்டது மாறித் தேற வேண்டியான் வந்த தற்குத்
தொண்டரைப் போல நீயுஞ் சொல்லுத ருமா வென்று
கண்டனி னீர்த தும்பக் கழறின ராகப் பின்மால் (கூக)

என்னுயிர்க் குயிரா யுன்னே யெண்ணியா னிருக்க வெண்மீ
தின்னரு முதாசி னச்சொல் லுரைப்பது தக்க தன்று
நின்னது துவித பாவ நீங்கிட வாசான் றன்பால்
மன்னிய வருளைப் பெற்று மற்றினே யடைதல் வேண்டும் (சம)

என்னலுங் கேட்ட நாம ரீசனே குருவை நாடித்
தின்னுறு பொருணீ நீயே தொலிவிலா தென்பா லென்று
மன்னயா னுன்னைக் காண மறுவிலா வுபதே சத்தைப்
பன்னிடக் குருவை நாடிற் பயனென்னே யென்று ரைத்தார் (சக)

அவ்வுரை கேட்ட நாத னன்பரை நோக்கி நாமா
இவ்வுல கத்து முன்யா னிராமன்கண் ணுகத் தோன்றி
வவ்விய ஞான ரூப வசிட்டர்சாந் திபர் தம்மை
எவ்வமில் சரண டைந்தே யேற்றன ஞன்ம ஞானம் (சஉ)

ஆதலா னீயிப் போதே யன்னது பெறுவா யாகிற்
சாதுசற் சனர்ம நிப்புந் தத்துவ வழியுந் தோன்றும்
போதுதி யென்ன நமர்பொன்னடி வணங்கி யெந்தக்
கோதிலாக் குருவைச் சார்வ தென்னலுங் கொண்டல் வண்ணன் (சங)

நளிர்நாரச் சடில நாகைகாதர்வாழ் கோயிறன்னில்
கிளர்ஞான வருவி சோபா கேசர ரொன்போ ரங்கண்
வளர்வாரிற் சரண்பு கென்ன மால்பிரி வுன்னி யுள்ளத்
தளர்வோடு நடந்து கோயில் சார்ந்தனர் நாம தேவர் (சச)

சினகரம் புகவி சோபா செருப்புக்கா லிலிங்கமீது
நனியுற வைத்து றங்க நாடினர் கிகைத்தெ னக்கென்
றநகனின் றெடுத்து ரைத்த வாரியன் போலுன் மத்தன்
கனவிலுங் காணே னென்று கருகிமுன் சென்று நின்று (சடு)

ஐயதுஞ் சீர்த்தி கேட்டிங் கணுகயா னடாத செய்கை
வெய்யரும் பொருத தாமும் விபரீத வொழுக்கத் தாலே
தய்யதுஞ் ஞான மெல்லாந் தோன்றின தெனக்கென் றேத
மெய்யரு மடடா வென்னை தவறிக்கால் வீழ்ந்த தென்றும் (சசு)

என்னுடல் மிக்க சோர்வுற் றிருப்பதா லவய வங்கள்
இன்னமோ ரிடத்தில் வைக்க வெடுப்பதற் கில்லை வன்மை
மின்னுறை நிறமா லன்ப மேவிய லிலிங்க மீதில்
மன்னிய காலைத் தூக்கி மற்றொரு பால்வைத் தீரோல் (சள)

பொங்குப கார மாக வுறுமெனப் பொற்ற ணுமர்
அங்கையாற் ருங்கிப் பாங்கர் வைக்கவவ் விடத்தும் லிங்கம்
தங்குத னேக்கி மற்றேர் தானத்து வைக்க வங்கும்
லிங்கமாய்த் தோன்றப் பாத நிலைகொள வைப்பதற்கு (சஅ)

எள்ளள விடமு மின்றி யெங்கணு மிலிங்க மாக
ஒள்ளிய பதங்க டம்மீ தேனுமூன் றிடுவோ மென்று
மெள்ளத்த னங்க நோக்க வினங்கின லிலிங்க மாக
வுள்ளத்து மிகவி யந்தங் கோய்வுறு வாரை நோக்கி (சக)

ஸ்ரீ பக்தலீலாமிர்தம்.

நெடும்பொழு தென்கா ரூங்கி நின்றதா லெனக்கு மிக்க
விடும்பையா யுளதென் காலே யிடுக வெற் றிடத்தி லென்னத்
தொடும்பத மேந்தி நாமர் தொழுது மெய்ஞ் ஞான வீச
தடம்பதந் தொடுமெ னக்குத் தாவர சங்க மெல்லாம் (நிம)

சிவமய மாகத் தோற்று கின்றதாற் சிறந்த பாதம்
எவணுற வைப்பே னைய வென்றுநற் றுதிப யின்மூர்
பவமறு ஞான வாசான் பதம்விடு மெனவெ மூந்து
நவமல ரபயக் கையை நாமர்தந் தலேயில் வைத்து (நிக)

காதில்ஞா னமு தம்பு கட்டலுங் திருநி றத்தின்
ஆதிநா யகனு முள்ளத் தமர்த்தர வீணை டந்த
கோதிலா னந்த வாரி குளித்த னரசவ மாகித்
தீதிலாக் குருவைப் போற்றித் தெளிந்தனர் பின்போர் நாளில் (நிஉ)

பண்டரி புரத்துச் சென்று பாண்டுரெங் களுக்கு முன்பு
தொண்டரோ டரிநா மத்தைச் சொல்லுநா மசாச்சீர் பொற்றுள்
புண்டரீ கத்துக் கங்கை பெற்றவன் புல்லி முன்னர்
இண்டவை ணவரை நோக்கி யினியிந்த நாமர் தம்மை (நிஊ)

சுடாததிப் பாண்ட மென்னச் சொல்விரோ வெனவி ளைவ
லிடாதரி கீர்த்த னங்கள் விளம்பிய தாச மெல்லாம்
அடாதினிப் பகர லென்ன வடையும்யார்க்கேனு மென்றுங்
கெடாதபே ரின்ப நல்குங் கிளரடி தொழுதற் ரூரே (நிசு)

கோராகுமாபாரதிருவடிகளேசரணம்.

ஆகசரித்திரம் (கூ) க்குச் செய்யுள் (கூஎக)

முற்றிற்று.

பரிசாபாகவதர் சரித்திரம்.

பண்டரியி லேவாழ்வோர் பரிசாபா கவதர்மலர்ப
புண்டரிகை யானரகு மாயியன்பர் பொருந்திமிக
மண்டி யவன் பிறுகருக்கு மணிதேவி முன்வந்து
கொண்டவரு ணிறைந்தவிழி கொடுபார்த்து மற்றவரை. (க)

உதரமுற வணைத்துமத லாயுனக்கென் வேண்டுமெனப்
பதமமக டனைநோக்கிப் பரிசாபா கவதரன்னே
இதமிகவென் குறும்பத்தி னிடறின்றி யெப்போதும்
துதியுனையே புரிந்தடியேன் றொழுதிருத்த லேவேண்டும். (உ)

அருள்செய்க வெனப்பதுமை யக்கணத்தோர் பரிசக்கல்
ஒருநீகொள் கெனக்கருணை யுடனுதவி யிதுதினமுந்
தருமிரும்பெல் லாங்கனகந் தாறைக்குந் தகுப்போற்றி
வருகவென வருள்செய்ய வணங்கிமகிழ் வொடுவாங்கி. (ங)

வந்துமனை யார்கமல சாமகிழ வவர்கரத்திற்
றந்துசெயும் வகையுரைப்பத் தடவுமிரும் பதுபொன்னாய்
மூந்துறுத லான்மகிழ்வின் மூழ்கினரை நோக்கியிதைச்
சிந்துதல்செ யாய்பிறர்தஞ் செனியிலெனத் தெரிவுசெய்து. (ச)

மனைவியொடு மகிழ்ந்துருக்கு மணிதேவி தனைவாழ்த்தி
இனைவுசெயுங் கவிஙிங்கி யெல்லோர்க்கு முன்போல
அனையருற வொருநாளங் கவர்மனைவி கமலசா
லினைதெதுசந் திரபாகை நீர்முகந்து மீளுங்கால். (ஞ)

ஙாமதே வரதுமனை ராசாயி யெதிர்வருவார்
தாமவரை நோக்கியன்பு சார்கமல சாமின்னை
ஆமதுகொண் டேதிரும்பு மளவுமிங்கே நிற்கவென
மாமதுரச் சொல்லினவணிமுத்திமழை முகந்துவந்தார். (ஙு)

பிடியில்வருங் துறுகின்ற ராசாயிவிரைவறிந்தே
அடியில்வருங் கியகமல சாவன்பு மிகநோக்கிப்
படியிலெனக் கன்புமிக்க பாவாயுன் வளமதனை
கொடி யிலுற மகிழ்வெனென நுவலுதற்கு மிகஙாண. (எ)

கண்டுகம லசாவென்பார் ராசாயி கலந்தகட்புக்
கொண்டுறுவோ ரிடத்துவெட்கங் கூடாது மிகமகிழ்வு
மண்டுறவுள் ளதுவழங்க வேண்டுமென வுளஙாணம்
மிண்டுடனே ராசாயி விளம்புகின்ற தென்னென்னில். (அ)

எனகணவர் ஙாண்மான மிகந்துருகும் பங்காப்பத்
தன்கணெரு நினைவுமின்றித் தரித்திரத்தாற் ளளர்வுபடும்
புன்கணெண்றுந் தோன்றுமற் புகழ்பாண்டி ரங்கனடி
யின்கணன்பு தனின்மூழ்கி யேதுமறி யாதவராய். (ஙு)

அன்னமுடன் வத்திரம்வேண் டாராகி யரிபசனே
கன்னயங்கொண் டேதிரிவோர் கடக்கைதனைக் கமலசா
என்னவகை யுரைசெய்வே னெனவுணர்த்த ராசாயி
தன்னருமை முகநோக்கித் தயைமிகுந்து சாற்றுகின்றார். (கூ)

உனதுபதி பசிக்கின்ற வுத்தமனு யோங்கொருவன்
றனதுமனத் தருள்கொண்டு தந்திலனே மிடிதிரக்
கனகமது வெனவில்லை யெனக்கழறக் கமலசா
அனவிமலன் றனைப்பசித்தென் னுவதுமற் றென்கணவா. (கூ)

தாயான ரகுமாயி தனைப்பணிந்து வாழ்த்துவதற்
காயார்க்குங் கிடைக்கரிய பரிசக்கல் லதையருளி
நோயான மிடிதிர்த்தா னுவல்பசனே யைக்கேட்டும
காயாத தருவினுக்குப் புனல்வார்க்கக் கடவதேன். (கூ)

என்றுனாக்க ராசாயி யெழிற்கமல சாமின்னே
நன்றுமக்குத் தந்தகல்லை நாண்பார்க்க வேண்டுமென
இன்றுனக்குக் காட்டுகின்றே னெனதகம்வா வெனபேசிச
சென்றுதம இல்லடைந்தார் தெரிவதற்கு ராசாயி. (கூ)

கமலசா மனைவந்து காட்டுகென வக்கல்லை
விமலமனத் தொடுகோட்டி வீட்டிற்குக கொடுபோயுன்
னமலமனை தனிலுள்ள வயங்களிலே பரிசிதது
நிமலமுறு பொன்கொண்டு நீக்குகியுன் மிடியென்னு. (கூ)

தந்திதனை யெவாகளுக்குஞ் சாற்றுதென் வயினுக
வந்துகொடு வெனபபோக்க மற்றவரும் வாங்கிவந்து
சொந்தமனை தனிலிரும்புசோதித்துக் கிடையாமற்
றந்தொழில்செய் கத்தரிகை பூசிகளிற் றுன்றடவி. (கூ)

பொன்னுக்கி யதுகொணடு போனகளுசெய் தறுபொழுது
நன்னம தேவர்வந்து நாயகிசெய் நலந்தெரிந்து
பன்னுரு மில்லாத படியேதிங் கெனவினவ
மின்னர்மெய் யுரைக்கிலிவர் வெருள்வாரென் றுறவெருவி- (கூ)

நிகழ்ந்தபடி தனையறிநதெ னித்தமுநீ ரமுதுணடு
புகழ்ந்திரும்பண டரிநாதன் பொன்னடியை யெனவுரைக்க
மகிழ்ந்தருளா தேநாமர் மற்றதனை யுள்ளபடி
திகழந்துரையா யெனிலுண்ணேன் செபபுகெனத் தேவியரும. (கூ)

வேறு.

உள்ள வாறுரை செய்யநன் சுத்தமர்
எள்ள லில்பரி சக்கல்லே யீதியான்
கள்ள மின்றதைக் காணுவென் றேதலும
தள்ள வுஞ்சினா தந்தனா காணவே (கூ)

குலவு நாமாகைக் கொண்டுகண் டன்னதை
நிலவு பாகை நெடுநெதி நீத்தத்தே
வீலக ளாக விடுதுவிட் டுக்கதை
தலமி ருந்தரி தன்புகழ பாடி னா (கூ

அதுகண் டஞ்சிரா சாயியை யன்னது
கதுமெ னக்கரந் தந்த கமலசா
வீதுப குப்பீல் விடக்கொடுத் தாயிது
வெதுக டுபதென் றெய்திக்க டுக்கவே (உ0)

கூட்டி வந்து கொழு நிருப்பிடங்
காட்டி யப்பரி சாபா கவதருங்
கேட்டி தெபபடிச் செய்யக் கிடைத்திரொன்
றூட்டி நின்றன ரன்னரா சாயியே (உக)

அன்ன காலே யளித்த கமலசா
முன்ன நேர்படு வார்முக நோக்கியீ
தென்ன யான்முன நீந்ததை யீகலா
துன்னு மாநகி வீரியிங் குற்றதே (உஉ)

என்று கூற வெதிர்ந்தவ ரிற்சிலர்
அன்று சீரரி தாசருக் காசையுந்
துன்று கல்லுஞ் சரியெனச் சொற்றனர்
நின்ற சிற்சிலர் நீதியன் றென்றனர் (உரு)

ஒருவர் தம்பொரு ளேப்புன லுய்ப்பதோ
தரும நீதியென் பார்சிலர் தந்ததைப்
பெருகு மாநகி பெய்திலர் வஞ்சனே
மருவி யுற்றன ரென்பர்சின் மாக்களே (உச)

அங்கு றும்பரி சாபா கவதர்தாந்
தங்கு நாமனா நோக்கித் தருவதோ
எங்கள் செல்வமெ னுங்களைக் கைக்கொடே
யிங்கி ருப்பதென் றின்னமுஞ் சொல்லுவார் (உடு)

நீர்நி ராசையி னின்றவ ரென்றிந்த
ஊர்க ளியாவு முதாக்க வரியடி
யார்கள் போலமைந் திப்படிச் செய்திடில்
நேர்வ தோவுமைச் சற்சனர் நீர்மையே. (உசு)

எனலு நாம ரிவர்முக நோக்கிக்கோ
கனகை தன்னடி காதல ரேகண்ணும்
மனம்வி ரும்பின் மடவினி டைக்கிடப்
பனபல் லாயிரம் பாய்ந்துகொள் கென்றனர் (உஎ)

கேட்ட யாவருங் கேழ்கிள ராற்றிலே
கூட்ட மாகக் குவிந்தகல் யாவையுந்
தேட்ட மாம்பரி சக்கலைச் சேர்ந்தவோ
காட்டு கென்ன நகைத்துதாத் தார்களே. (உஅ)

வினவு நாம ரெழுந்து வியனதிப்
புனலின் மூழ்கிப் பொருந்திய கற்களைக்
கமை தாயிரு கைக்கொடு வந்ததும்
அனக மானக லாய்ந்துகொள் கென்றனர் (உஈ)

கண்டு தம்மது கற்றெரி யாமற்பொன்
தொண்ட ரூசி பலகொடு சோதிக்க
அண்டு கன்முழு தும்பரி சக்கலாய்
விண்டு தாசர்கை மேவிச் சிறந்தவே (ஈ)

அன்ன கண்டவர் யாரு மதிசயந்
துன்ன நின்று தொழுது துதித்தினர்
பொன்ன தாசர் புகழரி தாசரை
நன்ன சேத்தி நயந்துசொல் கின்றனர் (ஈத)

அச்சு தன்றனக் கன்பொன் ரூயதும
மெச்சு மெய்மை பொதிந்துறு மேன்மையி
னிச்ச யத்தெரி கின்றிலெ னேரிலீர்
இச்சை கொண்டல நேந்திழை தன்னையே (ஈஉ)

போற்றி யோர்பரி சக்கல் பொருந்தினேன்
ஏற்றி லேனும் மருளா யினிதெனை
மாற்றி யாசையை மற்றவர் பொற்பதத்
தேற்ற மாகி வணங்கினர் சென்னியால் (ஈஈ)

இதம தாமுப தேச மெனக்கு நீ
ரூதவ வேண்டுமென் றேதிட நாமர்தாம்
மூதல்கொ ணர்ந்தவக் கற்கண் முழுவதுஞ்
சிதறி யாற்றிடைச் செங்கரஞ் சென்னிமேல் (ஈக)

வைத்து நல்லுப தேசம் வழங்கிட
உய்த்த நாமருக் கோரடி யாரென
மெய்த்த ஞானம் விளங்கிச் சிறந்தனர்
பைத்த சீர்ப்பரி சாபா கவதரே (ஈடி)

பரிசாபாகவதர்திருவடிகளேசரணம்.

ஆகசரித்திரம் (ம) க்குச் செய்யுள் (ஈஈஎ)

மூற்றிற்று.

ஐகமித்திரர் சரித்திரம்.

பரளி யென்னுமூர் தனிற்சக மித்திரர் பார்ப்பார்
வரசு லத்தவ தரித்தவர் வைணவ ராகி
யிரவு கொண்டதோ னியங்களீச் சேகரித் தென்றுந்
தரம தாங்குடும் பரட்சகஞ் செய்வது தனிலே

பொருள்வி ருப்பறு புண்ணிய ராகியே பொருந்து
மிருவ கைப்பற்று மில்லவ ராயரி நாமங்
கருதி யேத்துதல் கடைப்பிடித் துறுகின்ற காலை
மருவுமூரிலுள் ளாரிவர் மாண்மியந் தெரிந்து (உ)

இவரிம் மானிடத் தன்மைய ரல்லரொத் தேவர்
அவத ரித்தன ரோ வெனப் புகழ்ந்தன ராகத்
தவந லத்தினர் தமைச்சிலர் சாதுசற் சனரோ
இவரொ னப்பொரற் கெய்தினர் கற்றன வியம்பி (ஊ)

வருத்தி மானபங் கஞ்செய்து மதைமதி யாராய்ந்
திருத்து ஞானவை ராகங்க டிகழ்சிறப் புடனே
யிருத்தல் கண்டறி வில்லவர் தாம்பொரு ரிவர்த்தம்
கருத்த ழிந்திடச் செய்வதற் குன்னினர் கறுவி. (எ)

வருமொர் நாட்சக மித்திரர் மனங்கலங் காமற்
றிருவி ளையகன் றனைப்புகழ் செய்கையிற் றிருந்தி
மருவு மில்லிடைக் குடும்பங்க ளொதுதயில் வதிந்தார்
கருது தியவ ரவர்மனை யிட்டனர் கடந்தீ. (ஏ)

மடுத்த தீச்சிகை பரப்பியின் மூழுவது மாய்ப்பப்
படுத்து றங்கின தாசர்கண் விழித்ததைப் பார்த்தே
அடுத்த தியவிப் பதற்கொரு வகையுமின் றுதித்
தொடுத்த தண்டமொய்ப் பண்டரி நாதனைத் துதித்தார். (ஐ)

தினர் தங்களுக் காபத்தைக் காத்தருள் செய்யும்
ஞான நாயக நினையன்றித் துணையில்லை நாடிற்
றுனை னுஞ்சக மித்திரர் துன்பத்தைத் தவிர்க்க
ஏன மாகிமண் ணெடுத்தவன் சக்கர மேந்தி. (ஏ)

வந்து றங்குகின் றூர்தமைத் தீவருத் தாமல்
முந்து சக்கரத் தாற்றடித் தானிரா மூழுதும்
அந்த வீடெரி கின்றதீச் சிகையொளி யதுகண்
டெந்த வீட்டி லுள் ளாருமங் கெழுந்தனர் வந்தார். (ஐ)

கண்டை யோசக மித்திரர் குடும்பம்வெங் கனமுன்
மண்ட மூழ்கினர் மடிந்தன ரென்றுவாய் குழறிக்
கொண்ட லோந்துகூ கூவெனக் கங்குலுங் குறைந்து
சண்ட வெங்கதிர் தோன்றிடத் தீயெரி தணிந்த. (ஈ)

உள்ளு றங்கின குடும்பமும் விழித்தன ருணர்ந்து
வெள்ள மேற்றுயி லரிதிரு நாமத்தை வேண்டக்
கள்ள மில்லவ ரியாவருங் கேட்டனர் கருதி
மெள்ள வந்துளே நோக்கினர் வெந்திடா திருத்தல். (ம)

அதிச யித்தன ரரக்குமா ளிகைதனி லேவர்
முதிர்நெ ருப்பிடை வெந்திடா தருள்செய்த முறையே
இதுவும் பண்டரி நாதன தின்னரு ளென்று
துதிசெய் தாரரி தன்னெடுந் தொண்டரைத் தொழுது. (ஙக)

பின்னர் யாவருங் கூடின ரிவரது பெருமைக்
கென்ன தாமள வென்பதா யிவர்தமக் கியைந்த
நன்ன ராகிய குடும்பநாங் காப்பதே நலனென்
றுன்ன லாகிய வயித்திய நாதன்றன் னுழையில். (ஙஉ)

லெங லந்தரு வோமென்று தாசரிற் சேர்ந்து
பலரு மீவது பகர்ந்திடத் தாசரும் பகர்வார்
உலகெ லாந்தனக் குள்ளதோர் குடும்பமா யுள்ளோன்
இலகி யேயுறு பொழுதெனக் கொருகுறை யில்லை. (ஙசு)

என்று பந்தமில் லாவெனைப் பந்தத்து ளிசைக்க
நின்று கூறுதி ரெனவவர் யாவரு நெடிது
நன்று நன்றென வவிந்தவர் நாமத்தை நவின்று
துன்று சாதனஞ் செய்தொரூர் தந்தனர் தொகுத்து. (ஙச)

தாங்க ளேயந்த நிலத்தினிற் பயிர்செய்து தரற்குப்
பாங்க ராயின ரப்படி யேசில பருவ
நீங்க லானபி னிருபனு ளியமிக்க நேர்ந்தான்
ஆங்கு நீடதி காரியா யறிவிலா வவிநதன். (ஙஞ)

வந்தெ லாம்விசா ரித்தவன் வயித்திய நாதன்
சொந்த மாநிலத் தூர்சக மித்திரர் தொடக்கத்
தெந்த வாவியைக் ததுவென வரசனுக் கியைய
தந்த தாகமுன் தந்தவர் தமையெலாந் தடுக்க. (ஙஈ)

அவரெ லாமுந்தி யாஞ்சக மித்திர ரான
தவர்த மக்குத வியதரு மந்தனைத் தடுத்துப்
புவனி வேந்தன தாக்குதல் பொருத்தமன் றென்ன
உவன டங்கிடா துலோபமே செய்திட லுற்றான். (ஙஎ)

பின்னு யச்சக மித்திரர் பெருமையைக் கேட்டுத்
துன்னி னைவ ரில்லினைச் சோதிக்கத் தொடங்கி
என்ன நீர்சக மித்திர ரோபகை யிலையோ
மன்னு மிச்சகம் பகையிலை யுமக்கெனின் மாதோ. (ஙஅ)

எனது புத்திரிக் கிசைந்தது மணமதற் கேற்ப
அனக தெய்வபூ சனைசெய்ய வேண்டுமெற் றதற்குச்
சினமு லாவிய வொருபுலி வேண்டுநீர் சேர்ப்பீ
ரெனவி சைத்தன னன்றெனத் தாசரு மெழுந்தார் (ஙக)

காடு சென்றன ரொருபுடை யிருந்தனர் கவிஞ
னீடு பண்டரி நாதனே நினைந்தனர் நெடிது
பீடு சேர்திரு நாமங்கள் பற்பல பேசிக்
கூடு வாய்புலி யுருக்கொடிண் றெனவுளங் குறித்தார் (உடி)

பத்த ருக்கருள் பாண்டுரங் கண்ணந்தப் படியே
சித்தி ரப்படி வப்பலி யாய்முனஞ் சேர்ந்து
மெய்த்த வச்சக மித்திரர் கண்டுளம் வியப்ப
வெத்த லத்தினில் யாருமை நலிந்தவ ரியம்பில் (உக)

கொன்று தின்றிடு வேனெனக் குவலய நண்பர்
நன்று வெம்புலி யாய்வரு கின்றவென் ஞதா
துன்று நின்னையல் லாதெனக் கொருதுணை யுண்டோ
என்று தோத்திரம் பற்பல வியம்பின ரினிதே (உஉ)

கஞ்ச நாபவெம் மூரினி லோரதி காரி
எஞ்சி லாததன் மகள்மணத் தினுக்கிசை வாக
விஞ்ச தேவதா பூசைக்குப் புலியொன்று வேண்டுஞ்
செஞ்செ வேகொடு வருகென வெனக்குரை செய்தான் (உங)

.ஆத லாலிவ ணெய்திநின் றனையழைத் தேன்யான்
காதலோடுநீ வருகெனக் கண்ணபி ரானே
நீத மாகவுத் தரியத்தைக் கழுத்தினி னரப்பிப்
போதலாயின ரீர்த்துறை கின்றவூ புகுந்தார். (உச)

காசி னிக்கெலா மிதரர்வேங்கைகைக் கொண்டு
நேச மாய்வரக் கண்டவர் யாவரு நில்லார்
பாய்சி னப்புலி கண்டெதிர் நிற்பரோ படைந்து
வாசலிற்கத வடைத்தன ரூர்க்குள்வ ராமல். (உடு)

உலக மித்திரர் தமக்கு மித்திரரென வுள்ளார்
பலரு நீடிய மரங்களி லெறியே பார்த்துச
சலச லோசனண் முசரே நிர்புலி தன்னல்
கொலையி யற்றவோ வருகின்றீ ரென்றனா குறித்து (உசு)

அஞ்சு நீர்புலி யன்றுபாண் டரங்கனே யாகும்
விஞ்சி நீடதி காரிக்கு மெய்க்கொள வேண்டி
இஞ்சு வந்தன னெனவதைக் கேட்டவ ரேகி
நஞ்சு நேர்துருக் கனுக்குரைத் தனரவ னடுங்கி (உஎ)

தன்ம னைக்கத வடைத்துறச் சார்ந்தவத் தாசர்
நன்ம திற்கத வடைத்திருப் பதுநினை நாடி
முன்ம யக்குறப் புலிவடி வாய்வந்த முதல்வன்
பொன்ம ணிக்கரத் தறைந்துபோம் வழிதரப் புகுந்தார் (உஅ)

துட்டன் வாழ்மனை வாசன்முன் சார்ந்தந்தத் திருக்கண்
கட்ட மைந்தன கதவையுஞ் சார்த்துறல் கண்டென்
னிட்ட னேமுன்ன நீசொன்ன படிக்கியா னின்றே
எட்ட ரும்புலி தனைக்கொடு வந்தன னெனுமுன் (உஅ)

கொண்டு வந்தவெம் புலிகுமு றிடுங்குரல் கொண்டு
மிண்டு வாலடித் தார்த்திடக் கேட்டவன் வெருவிப
பெண்டு பிள்ளைக ளோடழ வவன்கொள்பெண் டாட்டி
அண்டு நீமிகு வயதுசென் முயத னுலே (கூ)

வெளிச்செல் வாயெனில் யாம்பிழைப் பேமென விளமப
ஒளித்த துஷ்டனங் கதற்குடன் படாதழ வுள்ளே
களித்த வூரினர் கேட்டற கைத்திடக் கலங்கி
அளித்திர் நீரென வுலகநண பாயஞ்ச லித்து (கக)

அவனி மித்திரர் நீரென்ப தறிந்திலே னுகித்
தவறு செய்தன னென்றந்தத் துருக்கனுஞ் சாற்றப்
புவன மித்திரர் தமக்கருள் சுரந்துமீப் பொங்கி
உவமை யற்றவப் புலியைக்கொண் டேர்கடந் தற்றூர். (கூ)

கான்பு குந்தொரு தனியிடங் காண்டலுங் கண்ணன்
கான்கு தோளொடி சருணரு பங்கொடி நன்கு
தோன்ற வேசக மித்திரர் பொன்னடி தொழலுங்
தேன்ற ருந்துழா யவன்றமு வினனருள் செய்தான் (கூக)

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிக ஸ்ரீவடி கவிதார்கிக சிங்க ஸ்ரீமத் ஸ்ரீ ஸ்ரீனிவாஸ தாதாசார்ய ஸ்வாமி விரசிதம் ஸ்ரீ சரிதத்திரயத்துக்கு செய்யுள் (கூகூ)

முற்றிற்று.

ஜோகாபரமானந்தர் சரித்திரம்.

வாகாகிய பாரசி யென்னுமூர் வந்த
ஜோகாபர மானந்த பக்தரோர் சோர்வு
மாகாதரி நாமசங் கீர்த்தன மான
பாகார்தரு நாவினா தோமறு பண்பார். (க)

சரியாவிர வேகொடு தஞ்சமு சார
பரிபாலனஞ் செய்பவ ராய்ப்பல நாளும்
அரிதாளினைக் கெணணிரண் டாமுப சார
மரியாதைகொள் பூசையி லேதும்வ ழாமல். (உ)

இனிதாயியற் றிப்பின்ன ரோரெழு நூறு
கனிவாகிய வந்தனே செய்துபின் கண்ணன்
உனவோதிய சேசையி லோர்சுலோ கத்தை
நனியோதிய பின்புவந் துண்பரந் நல்லார். (ங)

இவ்வாறிவ ரொய்துவ திற்பிச கெய்தில்
ஒவ்வாருண வத்தின மேயுப வாசஞ்
செய்வார்மனே யிற்குடி யானவர் கில்லோர்
கைவாறிட வேயிறங் குற்றவந் காளில். (ச)

மழைபெய்தத னுலவர் வாசல்சே ருங்கி
குழைவெய்திடக் கும்பிடுங் கொள்கைகுன் றாராய்த்
தழைவெய்திய சக்கரக் கையனேத் தம்முள்
விழைவெய்துறக் கொண்டுநின் றுர்புகழ் வேண்டி.. (ஞ)

அரிதன்பத தாசர்செய் யுஞ்செயல் யாவுந்
தெரிதந்தன ரக்குடி யானவர் தேர்ந்து
மருள்விண்டிடு மாதவ ரோயிவ ரென்ன
ஒருவன்கடி தோடின னுவண முற்றுன். (கு).

கொண்டாளெரு பொன்னுடை கொண்டுவந் தன்பர்
கண்டாமுறக் காட்டிநீர் கைக்கொள்க வென்றுன்
தண்டாமரைக் கண்ணவன் ருசர்வேண் டாராய்
விண்டார்வீலை மிக்குள திக்கலே வேறே. (எ)

பழைதாகிய துண்டெனி லீகெனப் பார்த்து
விழைவேமிகக் கொண்டவர் தம்மிடை மீதே
அழகாயுற வேயுடித் தேகின னப்பால்
மழைபோனிறத் தான்றுணைத் தாள்மற வாதார். (அ)

வேறு

அருணமெய் திவரை யன்ஞ னைரதனி லுடுத்துப போன
பெருமையை நினைந்து பீதாம் பரத்தினைப் பெரிது பேணி
மருவுமக் கலியிற் சேறு வாய்த்திடிற் பழுதா மெனறு
தருகலே தொங்கு ரூமற் றம்மிடை யுடுத்திக கொணடு. (சு)

மருவுதே காபி மான மாற்றிமுன் வணங்கல் போலத்
திருமகள் கொழுநன் றன்னைத் தேர்ந்துரும் பிடுதல செய்யா
கருதிய கலேமேல் மிக்க காதலின் வணங்க லாலே
பருதிமேல் பாலிற் சார்ந்தும் பணிவது முடிவுரு மல (ஐ)

மனத்துளே வருத்தங் கொண்டு மாலடி பணியுங் காலங்
கனத்திக் கலையா லன்ரே வென்றகங் கருதி யிருத
அனர்த்தமா மபரா தந்தீர் வதற்கிந்த யாக்கை தலனச
னைத்தவா ளாலீர்ப் போமோ நியிடை யமிழத்து வோமோ (ஙக)

எனப்பல நினைந்து ணும லேகின நில்லம் விட்டு
மனக்கிசை வான வேரே ரிடஞ்சென்ரு மருவும் போது
கனத்ததோர் நுகத்தைப பூண்டு காளைக ளிரணடு கொணடு
னைத்துட ஞேட்டிச் சென்ரான் செறுவினை யுழுதறகாக (ஙஉ)

ஓட்டியே செல்லு கின்ற வுழவினை நோக்கியன்பர்
ஈட்டிய துயரத்தோடு காளைக ளிரண்டுங் கொண்டோய்
கேட்டியுன் னிரண்டுமாடுங் கிளத்துமென் றனக்குரத்தந்து
நீட்டிய வினைகொள் பீதாம் பரந்தினை நீகொள்கென்ரூா (ஙங)

மற்றவ னுகந்துகொண்டு மாடுக ளிரண்டுந் தந்தான்
குற்றமி லன்பர்பாசங் கொண்டென்கா விரணடுங்கட்டி
உற்றதோர் நுகத்தி லேர்க்காற் கொபபுற மிருந்தபாசஞ்
சுற்றுறப் பிணித்து மாட்டைத் துரந்துபோ கென்னச் சொன்னர் (ஙச)

செயற்கருஞ் செயலிதென்று தேர்ந்திடா ஞதலாலே
மயற்செயுங் கலேயைக்கொண்டி மாதவர் சொன்னவாறே
இயற்றினன் போக மற்றை யெருது களிரணடுமீராத்துப
பெயர்த்தன கல்லு முள்ளும் பெருனை விடங்களெல்லாம் (ஙஞ)

நரம்புட னெலும்பு நிற்க நண்ணிய தசைக டேய்ந்து
குரம்பையில் வழியச்செந்நீர்க் கோலமா யன்பரின்று
நிரம்பப சாரந்தீர நேர்ந்தது நன்றே யென்ரூர்
வரம்பறு தின்பநேர்ந்தும் வருத்தமெள் ளளவுமின்றி (ஙசு)

அரி திருநாமந் தன்னே யறைவது குறைபடாராய்ப்
பெரிதரை பட்டச்சீவன் பெயர்வது மளவதனஞர்
கரிதுயர் காத்த கண்ணன் கருணைகொண் டோடிவந்தே
எருதுக டமைநிறுத்தி யிசைத்தகட் டவிழ்த்துவிட்டு (ஙஎ)

அன்பர்த முடல மெல்லா மங்கையாற் றடவுமுன்னே
துன்பங்க ளெல்லாந்தீர்ந்து தோன்றிட வடிவ நன்ரூய்
மூன்புநின் றவனாநோக்கி மூதறிவினரோ நீர்தாம்
என்புறத் தேயச்செய்தீ ரேதுமோ பிழையின்ரூக (ஙஅ)

எண்ணடி யார்களுண்ப தெனக்குநல் லலியதாகும்
அன்னவர் பேசுகின்ற வலையெலாங் துதியேயாகும்
முன்னுகைத் தொழில்க ளெல்லா முத்திரா கொண்டதாகு
மன்னவர் நடப்பதென்னே வலஞ்செய்த லாகுமின்னும் (ஐகூ)

அவர்துயில் வதுதானென்னே யன்புடன் வணங்கலாகும்
எவமறக் களிப்பவெல்லா மெனதின்ப வடிவமாகும்
சுவமுற வென்று கொண்டு நானும்மை நோக்கிநிற்கத்
தவலரும் பரமானந்த தாசரே நீரென்செய்தீர் (உஐ)

இப்படி யாகச்சொல்லி யெதிர்நின்ற பாண்டு ரெங்கன்
மெய்ப்படி வத்தைநோக்கி விசாமல ரடியில் வீழ்ந்தும்
ஒப்பறு துதிகள் செய்து முவமையில் லானேயின்று
தப்பறக் கருணைசெய்க வென்னலுஞ் சார்ங்கபாணி (உக)

கன்றென வருளிக்கோயி னண்ணிநல் லன்பர்க் கெல்லாம்
ஒன்றிய பரமாநந்த ருளுற்றிய செய்கை கூற
கின்றுணர் ஞானதேவர் நின்னடி யார்கள்செய்கை
வன்றும்யா ராலுஞ் சொல்லற் கெளிதலவெனத் துதித்தார். (உஉ)

ஜோகாபரமானந்தர் திருவடிகளே சாணம்.

ஆகசரித்திரம் ஐஉ-க்கு செய்யுள் கூடுஐஉ.

முற்றிற்று.

நாஹரிபக்தர் சரித்திரம்.

கலிவிருத்தம்.

பரமன்வாழ் பண்டரிப பதியி லேயொரு
நரகரி யெனும்பெயர் நண்ணு பொற்கொல்லன்
அரனெனு மல்லிகார்ச் சுனனே யனபுது
திரமிகப் பூசனை செய்து வைகுவான். (க)

குடநடன் கோயிலுக் கணித்து மேவியும்
நடையுறு கோயிலின் மார்க்க நணையியும்
படவர வமளியான றன்னைப பார்த்திடான்
அடமுட னுறைகுவா னென நாளிலே (உ)

மிகுதன மூளனெரு வணிகன் வினவவா
தொகுதனம் போலொளிர துளவ மாலையான
நகுதருங் கோயிலில் வந்து நாதனை
நெகுதரு மூளத்தன்பு நிரமபப பூசிதது (ங)

தோத்திரம் பலபல செய்து தூயரும்
தாத்திரி நாதவோர் தினைய னல்குதி
சீர்த்திற மிகவெனக் கென்று செபபியத்
தீர்த்தனே வணங்கித்தன் மனைக்குச் சென்றனன். (ச)

சென்றபின் சிலபகல கழியச திசரன்
நன்றரு ளாலொரு நந்தன தோனறிஞன்
ஒன்றிய வுவகைமிக் கோங்க வுறறவன்
மின்றிகள் மார்பின னருளே வேண்டியே. (ஞ)

நவமணி பொதியலா ஞாண்செய் திருநிலா
தவனிடைச் சாத்திடத் தழைக்கு முள்ளத்தான்
அவனிநா யகனுறை கோயி லண்மினன்
எவமிலன் புடன்ருழு தேத்தி நின்றனன். (ஈ)

அர்ச்சகர் தம்மை நேர்ந் தியாரிவ் வூரிலே
சர்ச்சனன் பொன்னனா ஞாண்செய் தக்கவன்
மெய்ச்சரி தன்னிடை மேவச் சாத்தற்கு
நிச்சயஞ் சொலுமென வவர்நி கழ்த்துவார். (எ)

இச்சின கரத்தரு கிருக்கின் ருனெரு
மெய்ச்சுபொற் கொல்லன்மற் றவனில் வேறிலர்
கச்சின படிசெயற் கென்ன நன்றெனக்
கச்சமில் பொருள்வணி கன்வந் தெய்தினன். (அ)

கம்மியன் றனைக்கண்டு கமலே கேள்வற்கு
அம்மிய மணியரை ஞாண்செய் கென்னலும்
விம்மிய தனத்திரு விரும்பு மார்பினன்
அம்மிய விடையன வறிந்து வாவென்ருன். (ஙு)

வணிகனவ் வளவெடித் துதவ மற்றவன்
மணியரை ஞாண்செய்து வழங்க வாங்கிவந்
தணிதிகழ் விமலனே யருச்சித் தேத்தினன்
பணிவுட னிடையிட விறைபற் றுமலே (ஐ)

இருப்பது கண்டுமீண் டெய்திக் கம்மியன்
விருப்புறச் சொலிச்சரி செய்ய வேண்டினன்
சரிபபடித் தித்தரக் கொண்டு சார்ந்திடை .
தரிப்புற நீண்டது தீனைக்கொண் டேதினுன். (ஙக)

நீண்டது குறைசெய்து நேர்க வென்றனன்
ஆண்டதைக் கம்மிய னன்னவா செய்து
பூண்டுகா ணெனத்தர வந்து பூட்டினுன்
மீண்டது குறைவுற லிம்மி மீண்டனன. (ஙஎ)

நீட்டுநிற் குறைவுறுங் குறைக்கி நிள்வுறும்
பூட்டுறத் தக்கதா காது போவது
வேட்டிடு விமலற்கு விருப்ப மில்லையோ
சுட்டுமென் பிழையினே யாகினேவெனு. (ஙசு)

மீளவும் வந்துகம் மியனே வேண்டி நீ
கோளிடை யளவது குறிக்க வாவென
நீள்சடை நிமலனே யன்றி நேருறேன்
வாளர வமளியான் மாட்டென் ரேதினுன். (ஙச)

ஒதலும் வணிகன்மிக் குறுக ணெய்தியே
நீதயை செய்தென்ற னியம முற்றுதி
மாதக வுனக்குறு மென்று வாழ்த்திநீ
போதரு கெனக்கொடு கோயில் போந்தனன் (ஙஞ)

வந்தகம் மியன்விழி மறைய வாடையாற்
பந்தனே செய்துகொண் டளவு பார்ப்புற
முந்தினன் வணிகன்கை பிடித்து முந்தலும்
நொந்தனர் கண்டவர் துவல்வ தாயினுர். (ஙசு)

உயர்பரஞ் சோதியை யுற்று நோக்கிட
நயனங்க ளாயிர நாங்கள் வேண்டுவேம்
இயலிவன் கண்மறைத் தேக லெண்ணேயோ
செயலெனத் தீவிழி தெறிப்பச் செப்புவார். (ஙள)

கற்பகம் போனிமிர் கமலக் கண்ணனுர்
பொற்பிவன் கட்புலம் பொருந்துரு்தேோ
நிற்பர வடிவுகண சேர்வ தேயன்று
பற்பல சொலியென்ன பயனென் றேசினுர். (ஙஅ)

ஆகவந் தமலனு ரங்கந் தீண்டலும்
வேகவெம் புலியதள் வேழத் தோல்செறி
பூகநீள் சடைதுதல் பொருந்து தீவிழி
மாகவெம் மழுத்துடி மான்வி ளங்கவே. (ஙக)

துணுக்கெனக் கண்களைத் திறந்து தோன்றிய
இணர்த்துள வணியலு மிடையிற் கைகளும்
திணர்த்தசெங் கல்லிலே திகழுந் தாளுடன்
மணித்திரு மேனிமால் வடிவுங் கண்டனன். (உடு)

காண்டலு மூடினன் கண்கள் முன்புபோல்
நீண்டசெஞ் சடையவ னிலைய தாகவே
நீண்டிய கைகட்குத் தெரியப் பட்டது
மீண்டுதன் கண்களே விழித்து நோக்கினன். (உக)

யச்ஞமா மலிங்கர் பசும்பொற் சோதியை
அச்சுத னுகரின் றருளு மையனை
ஹரஹரசிவ வடிவுமாம் விழிகள் மூடினல்
லையே திறக்கினு ரணனி தென்னையே. (உஉ)

என்றுற மயங்கினு னெதிர வுஞ்சினன்
தன்றுணைக் கண்களீர் ததும்ப நோக்கினன்
மன்றலஞ் செழுஞ்சரண் வணங்கி வாழ்த்தினன்
ஒன்றல பலதுதி யுருரு மூள்ளத்தான். (உரு)

நின்னில்வே றேசிவ னெனநி னேக்கநின்
றன்னில்வே றிலையெனச் சமைத னன்றரோ
என்னிலா மையமின் றேத விர்ந்தது
பொன்னிலா வியநிறப பூமி கேள்வனே. (உச)

சிவனுரு நின்னுளே செறியச் செய்தியேல்
புவனமேல் லாமுன துந்தி பூத்ததே
தவறிலே தவறிலை யென்று தாழ்ந்தனன்
அவன்முக நோக்கியீ தமலன் கூறுவான். (உஎ)

வேற்றுமை கொள்ளலை சிவன்வே றெயெனத்
தோற்றுமென் னிடத்துநீ தொழுஞ்ச தாசிவன்
சாற்றுமென் சொற்படி தயங்கக் கண்டுநீ
போற்றுகென் றுரைசெயப பொருந்த நோக்கினன். (உசு)

தலைமிசைச் சிவருறி தயங்கக் கண்டனன்
நிலமிசை வீழ்ந்தடி நெடிது தாழ்ந்தனன்
அலைமிசைத் துயின்றவ னடியை யன்றுதொட்
டலைமிசை யுருருபொன் னெத்துப் பற்றினனன். (உஎ)

பற்றினின் ருன்றனைப் பழிப்பி ஞமர்செய்
தற்றபோ னகவமு துண்டிற் பாரொடும
இற்றைநீ யும்வரு கெனவு மெய்தினன்
கற்றையஞ் சடைமுடிக் கண்ணு ளானெமம். (உஅ)

அடியரோ டிருவரு மமுதுண் டார்ந்தபின்
சடிலவான் பிறையவன் றமனி யக்கொலன்
படியைநேர் கண்டுநீ பதும ராபன்றன்
குடியுடி யவரொடு குழுமி வாழ்வதே. (உக)

எனக்கிசை வெனவினு யவனு மின்றுதொட்
டினக்கிசை வேயெனக் குறுகி யாமென
மனக்கிசை நரகரி தாச வாழ்கெனக்
கனக்கிசை வண்ணடி யார கன்றனர். (கூடி)

நரஹரி பக்தர் திருவடிகளே சரணம்.

ஆக சரித்திரம் ஐகூ-க்கு செய்யுள் கூஅஐஉ.

முற்றிற்று.



ஜுனுபாயி சரித்திரம்.

எழுசீராகிரிய விருத்தம்.

கார்த்திகை யேகா தசித்தின மெவருங் கருதுசிர்ப் பண்டரி புரத்தில்
யாத்திரைக் காரர் பலரவண் வந்தா ரதிலொரு கன்னிகை யீன்ற
தாய்த்தரு தந்தை யொடுவந்து கண்டு சவுரிவாழ் பண்டரி மகிமை
வித்தினள் மகிழ்ந்து தந்தைதாய் தம்மை யின்பொடு நோக்கின ளிசைப்பாள் (க)

நானிவி டத்தி னிரந்தர வாச நனிசெய வேண்டினே னுங்கள்
பானினை வில்லே னுடன்வரு கில்லே னென்றவள் பகர்வதைக் கேட்டு
மானினை விவளுக் கிச்சிறுவயதில் வந்ததென் னென்றவர் வியந்து
மீனிகர் விழியா டனைத்தனி விடற்கு மிகமனம் வருந்தினர் மீண்டும். (உ)

பலவிதத் தழைத்து மூடன்படா தரியின் பாததா மரைதறை பருகி
நலமிகக் களித்துப் பொருந்துநிச் சயத்தை நன்றறிந் திருவரு நயந்து
மலர்மகள் கொழுநன் கோயிலில் விடுத்து வந்தனர் தங்களூர் பின்பு
நிலமளந் தவனைச் சேவிக்கக் கோயி னேர்ந்தனர் நாமதே வென்போர். (ங)

பாண்டுரங் கனைக்காண் பவரவ ணுலவு பாவையைக் கண்டவள் மீது
வேண்டுறு கருணை பிறந்துநீ தனியாய் விரும்புதாய் தந்தையை யின்றி
ரண்டுவந் தனையா ருன்பெய ரென்னை யியம்பெனச் சனுயிதா னென்பேர்
தாண்டுறு தரங்கக் கடனிறத் தவனே தந்தைர குமாயிதான் ருயே. (ச)

எனக்குவே ரெருவ ரின்றென விங்ஙு னிருக்கின்றே னென்பது கேட்டு
மனத்திடைத் தயைமிக் கெய்திய நாமர் மற்றந்தச் சிறுமையை வருக
எனக்கொடில் லேதிக் குணுயியை நோக்கி யிச்சிறு மியின்வர லாறு
தினைத்தெரி வித்து மற்றிவள் கண்ணன் ருசியா கியவொரு கூனி. (ஞ)

கலியுகத் தகித்துப் பண்டரி புரத்துக் கருணைமா னுமத்திற் களித்து
மலிதரு மனத்தா னென்னலுங் குணயி வளர்த்தனள் மருவியன் புற்று
மெலிவுற வளர்ந்து பெரியவ ளாக வேறுளோர் யாரைநீ யென்ரூல்
குவிசிசேய் பாக னடிபுகழ் நாமர் குடியடித் தாகியா னென்பாள் (சு)

இப்படி நாம தேவர்தம் மனையி லியன்றவூ ழியமபல செய்து
மைப்படி மேனி மாயனே நாமர் வாழ்த்தலகேட் டெமகிழ் வாவாள்
அப்படி யாக வொருதினத தரவி லேந்துநா ழிகையள வதிலே
மெய்ப்படி நாமர் மூதலினர் துயில மேவின காற்ரூடு மழையே (எ)

மழைதொறுங் காற்ரூன் மாடம்வேய் கூரை மாய்ந்தன பலபடி யாகத்
தழைதழாய் மார்பன் ரூன்பொரு ளுகிச் சக்கரத் தாற்றடைசெய்தான்
விழைதரு நாமர் மூதலினர் துயரா விதம்பின்பு தானவண் மேவிக்
குழைசுவ ரொடுத்துக் கூரையும் வேய்ந்து கொண்டூறு போதிலே நாமா (அ)

விழித்தனர் வெளியே வந்துமுன் கண்டா ரிமலபீ தாம்பரம் விளங்கச்
செழித்ததகே யூர குண்டல மகுடந் திகழ்திரு மேனியைப் பணிந்தார்
வழுத்துசி ரடியைப் பற்றினா தாநீ மற்றிநத வீரலிலவந் தென்னை
இழைத்துள தென்னத் தொணடனைக் காபபோ னியம்புவா னெறிமழைக்காற் [ரூல்

உன்னது குடிசை யழிந்தது போகா துறச்செல்வை செய்தன னீநின்
றன்னது குடும்ப வியற்கையை விட்டென் றனைச்சரண் புகுதலா லின்னே
என்னது சுமையா யிதுசெயே ரூகி லெனையனை யீன்றவள் வைவாள்
மன்னது தனைநீ யறிதியே யெனுமுன் வநதனள் குணயிமால் வடிவை (ஆ)

கண்டடி வணங்கிப புகழ்ந்தன ளாகக் கலநதுமூ வருமனை புகுந்து
கொண்டுறை போது ஜனபாயிவந்து கொண்டல்வண ணன்பதம் வருடி
மண்டுப சாரம் புரிநதன ளிருக்க மாலடி வணங்கியே நாமர்
தொண்டுகொண் டவனே யெம்முட னமுதுசெய்கென வேண்டினர் சொன்னர்

நாயக னிசைந்து கோவிந்தன் விட்டலன் நாரணன் மகாதேவ னென்போர்
ஆயபின் னாகளு நாமருங் குணயி யன்னையு மனைவியு மாகப
பாயவோர் கலத்தி லமுதணும் போது பார்த்தனள் ஜனபாயி மனத்தில்
மேயதோர் வருத்தங் கொண்டுபெண் டரிவாள் விமலனே யெனைவிடித் தனையே

இழிவுநீ செய்வ தியல்புனக் காமோ வெனைபபர தேசியென் றென்ன
வழுவில்சீர் விடல ணமகா நோக்கி மற்றெனக் கருத்துமிவ் வமுது
கழியநான் கிலதென் றுனாத்தலு நாமர் கருதினள் ஜனயியு முண்ணு
தொழிவதே யென்ன வதுதனு ணுணவிங் குருகியா யிலதுனக் கென்ரூர் (ஙரு)

எனலுமுண் பவன்கேட் டெழிற்கர முதறி யெழக்கண்ட ராஜாயி நாதன்
றனதுகை கால்கள் சுத்திசெய் தனள்பின் சாமியோர் பாயன்மீ திருந்தான்
பினரனை குணயி ஜனயியை யழைத்துப் பெறுகென மிச்சிலைத் தந்தாள்
அனகமா மிதுதான் பிரமரூத் திரர்க்கு மகப்படா வமுதெனக் கொணடாள். ( )

கொண்டவ டனது குடிசிடை வைத்துக் கோகன கத்தவள் கொழுநா
அண்டிய வெனதில் வருகென வேண்ட வன்புள நாமரோ டாங்கு
மண்றெத் தயிலு மாதவன் விழித்து வந்தந்தச் சனயியை மடந்தாய்
உண்டிடும் போது நீயிலா தகிறு லுண்டி லெனிரம்பவிப போது (ஙஞ)

பயிலுள தன்ன மெனக்கிடு கென்னப் பாண்டுரெங் காபவ நாசா
நிகியிடைக் குணுயி தந்தனள் மிச்சி னினக்கது தக்கதோ வென்று
கசிவுறு மனத்துச் சனுயிதான் சொல்லக் கண்ணனன் றதையிடு கென்ன
வசியது ஜனுயி யிடவவ ளுடனே மாதவ னுண்டுள மகிழ்ந்தான் (டசு)

பின்புகை கால்கள் சுத்திசெய் தங்குப் பேசிய விருவருந் துயில
வன்புறு குணுயி விழித்தணள் வெளியே வந்துதன் புதல்வனைக் கூவி
அன்புள நீயு நானுந்தாவ கினபின் பகிலகா ரணனிந்தச் சனுயி
தன்புடை வந்து மிச்சிலே யுண்டு சயனங் கொண் டனனங்கே யென்ருள் (டள)

நாமதே வன்ன யெவருளந் தூய்மை நணுகிய தோவங்கு நணுகக்
காமனுர் தாதைக் கிலேயொரு கால நியதிதான் கருகிய போதே
போமதே செய்கை மிச்சிலுண் பதுமோர் பொருளன்ற தியற்கையே யென்ப
தாமது கேட்டுத் துயில்செயும் விமலன் சாமமொன் முறவிடி யற்கே (டஅ)

எழுந்திரு ஜனுயி திரிகையிற் றூசி யெலாந்துடைத் துன்வர வினேயான்
விழைந்தினி திருக்கின் றேனென விழியாள் விழித்திட வெடுத்தினி திருத்திச்
செழுந்தனிக் கரத்தா லவடலே மயிசைச் சிக்கறத் திருத்திமுன்ருனைக்
கொழுந்தினைத் தலேமேற் றந்துதா னேயோர் கூடையி லரிசியைக்கொணர்ந்து

நானனைக் கின்றேன் மாவையிங் குனது நன்கையால் முனேதொட்டுக்கொண்டு
தேனெனப் பாடு கென்னலும் ஜனுயி நிண்டின ளண்பினிற் சிறந்து
ஞானதே வாதி யடியர்பால் விமல னல்லருள் செய்தினி தாடத்
தானெலா மோவி யபங்கமாங் கவியாற் சாற்றிடக் கேட்டனன் சௌரி (உவ)

தலேதுளக் குடனே பரவச ளுகிச் சார்ங்கவிற் கையண்மா வுசாக்கும்
நிலேதெரி குணுயி ஜனுயிபால் வந்து நின்வயி னரிகியே தரைக்கச்
சொலேயெனப் பேசா திருப்பது கண்டு சுளித்துவேத் திரங்கரங் கொண்டே
அலேவுற வடித்தாள் யாருடன் பேசி யமர்ந்தனே யிங்ஙனே யென்று (உக)

சினத்தின ளடிதான் சீதரன் மூடிமேற் சேர்தலு ளான்விடோ பாவிம்
மனத்திலன் புடைய ஜனுயிபால் வந்தேன் மாவனைத் திடற்கெனே யடியேல்
எனத்திரு நாத ளுமதே வறிந்தே யீன்றதாய் தன்முகநோக்கி
வனத்துழாய் மார்ப னென்றுநீ யறியாய் வருகெனக் குணுயியு மயங்கி (உஉ)

நாணின ளுலக நாதனே யடித்தே னேயென நலிவொடு மனத்திற்
கோணின ளாகி ஜனுயிதா னரியைக் குறித்தன டன்வசங் கொண்டாள்
ஏணிலே யெனக்கென் றிருத்தலும் ஜனுயி யெம்பிரா னிடத்துறு மன்பாம்
ஆணியைத் தொட்டு விசாகமாக் கிரிகை யனாத்தனள் சஞ்சித வரிசி (உங)

அவ்வியத் தத்தில் வியத்தமா யனாத்த வந்தமா வனேத்தையும் வாரிச்
செவ்விய கூடை நிரப்பிவைத் தன்பின் றிருவினு யகன்றுயில் செய்ய
வவ்விய ஜனுயி விடியுமு னெழுந்து மாதவன் றினேத்துயி லெழுப்பி
இவ்விடைவிடுத்துன்கோயில்சே ராம லிருத்தியேற் கலகமா மென்ருள் (உச)

என்றலுந் துயின்ருன் விடிந்ததோ வென்ன வெழுந்துரித் திமையக் சத்தால்
தன்றனிப் பீதாம் பரத்தையும் பதக்கந் தன்னையுங் கிடத்தியச் சனுயிக்
கொன்றிய கன்தை யுடுத்தித்தன் கோயி லுட்புகுந் துறைத்தனன் விடிந்த
தின்றையச் சகர்தாம் வந்துபொற் கோயிற் பிறங்கிய கதவினைத் திறந்தார். (ஊ)

ஸ்ரீ பக்தலீலாமிர்தம்.

கந்தையைப் போர்த்துச் செங்கன்மே னின்ற கருணையங் கண்ணனைக் கண்டார்
எந்தையே பீதாம் பரமெவர்க் கிந்தா யெங்ஙனே தேடினுய் கந்தை
நிந்தையி லுனது மேனிக்குக் கந்தை நேர்வதோ வென்றதை நெகிழ்த்து
விந்தைசேர் பதக்கந் தண்ணியு மார்பிற் கண்டிலர் வெருண்டனர் வியந்தார். ( )

மூடின படியே கதவுதா னிருக்க முந்தின தெவ்வழி யென்பார்
கூடினும் போவ தியாரக மென்பார் கொண்டவிக் கந்தைதா னுமர்
தேடின தாசி தன்னது போலத் தெரிகின்ற தறிகுவ மென்று
நேடினர் காம தேவரிற் புகுந்து நின்றதோர் ஜனுயியைக் கண்டார் (உஎ)

நின்னிடைக் கண்ணன்வந்தாதா லிங்கேநேர்ந்ததுபொன்னுடையெனக்கொண்
டுன்னிடை யவன்றன் பதக்கமு முளதா முதவுதி யென்னலும் ஜனுயி
என்னிடைக் கிடையா தென்னலு நீதா னெப்படி·யன்னவ னிங்கே
துன்னிடச் செய்தா யென்றவ ருகிலைச் சோதிக்கப் பதக்கந்தோன்றியதே (உஅ)

கண்டவர் வெருட்டுங் காலையி லூரார் கலந்தனர் நாமர்தம் மனையோ
பண்டைய தன்று நேற்றுறு காற்றிற் பறந்தன கூரைக ளெல்லாம்
கொண்டநம் மனையோ புதுக்கில மிதுவோ கூரிருள் விடியுமுன் புதிதாய்
அண்டிய தென்னே யதிசய நாமர்க் கமைத்தவன் கண்ணனே யாமால். (உக)

என்பது கேட்டோர் கண்ணனே யருளி னீகல ஜெபெரு மாடம்
நன்பொரு ளென்பார் சிற்சிலர் செல்வ ரனிதரிற் செருக்குமிக் காகி
அன்பில ராவா ராதலா லுதவா னமலனென் றுரைப்பவ ராக
முன்புசோ இத்துக் கொண்டவர் ஜனுயி மோசஞ்செய் பவளென மூனிந்தார் ( )

இங்ஙவள் சாமித் துரோகியா தலினு லேற்றுதுங் கழுவினி லென்றே
அங்கவ ளைக்கொண் டம்புலிப் பாகைக் கணுகலுஞ் சனுயிதா னமலா
செங்கன்மே னின்ற சீதரா வடியேன் செய்ததெ னிங்ஙனே செயற்கென்
றங்கைக டலைமேல் வைத்தனள் புலம்ப வநாதர க்ஷகனரு ளாலே (ஙக)

கழுமர நீராய்க் களைந்தது ஜனுயி கண்கலக் கத்தினைக் களைப்பான்
வழுவில ஜெடி வந்தனன் கண்ட மதிதலத் தோரொலா மகிழ்ந்து
குழுவினர் புகழச் சனுயியைப் பிடித்தோர் கோதிலாய் நின்பொருட் டமலன்
தழுவிவ ஜெடி வந்தத ஞனீ தன்னியை யெனவிடித் தகன்றார். (ஙஉ

விடுத்தபின் ஜனுயி வீட்டில்வந் தமர்ந்து விமலனை முன்புபோல் வேண்டித்
தொடுத்தன ளபங்கக் கவிகள்செய் நாளிற் நுளவணி தோளினுன் மைக்கூ
டடுத்தெழு திங்கோல் காயிதங் கொண்டங் கவள்சொலு வனவெலா மெழுத
மடுத்தனன் கோயி லிருக்கநேர் வந்தார் மாறிலா ஞானதே வருமே (ஙங)

ஞானதே வரைக்கண் டெழுதிட வுள்ள நாணிமை முதலெலா மறைத்துத்
தானமர் போதுகண்டவர் வணங்கிச் சாற்றுவார் தேவகி தனயா
ஊனமின் றேகாந் தத்திருந் தென்னை யெழுதினை யுரைக்கென நாதன்
ரூனரு ளுடனே ஜனுயித னபங்கக் கவியெழு தினனெனச் சாற்ற. (ஙச)

கேட்டலுஞ் சிரித்து ஞானதே வமலா ளெத்திய ஜனுயிநின் புகழே
காட்டல்செய் கின்ரு ளதுபிற ராலே நயந்திடத் தக்கது நீயே
தீட்டல்செய் வதுதான் சிறந்ததன் றென்னச் சீதரன் ஜனுயிதான் செப்பல்
வேட்டன னினிதர யிருத்தலா னனே யெழுதவும் விரும்பினே னென்ரூன். ( )

முன்புபோ லெழுது கின்றவன் ஞான தேவர்த முகத்தினை நோக்கி
கன்னித தன்னை மறைத்தது கமல கான்முகற் குங்தெரி யாது
கின்புலந் தோன்றிற் றெவ்வித மென்ன நிமலனே ஞானதே வென்போர்
அன்புட னேக்கி யையநின் பெருமை யடியருக் கெளிதுதா னென்னூர். (ஈசு)

வினவிய விடலன் கிரித்துற ஞான தேவரவ் விமலனை நோக்கி
அனகனீ வருக நாமகைக் காண வென்னலு மமலனும் விரும்பிப்
பினருணர் ஞான தேவர்தங் கையைப் பிடித்துட னுமதே வமரும்
மீனபுருந் கிடலு நாமதே வெதிர்ந்து மார்புறத் தழுவினர் மகிழ்ந்தார். (ஈள)

ஆசனத் திருவர் தம்மையு மிருத்த வப்பொழு தன்பரொல் லோரும்
நேசமுற் றடைய வவர்கள்யாவரையு நிமலனுந்தழுவின ரிருத்தி
மாசறு நாம தேவரை நோக்கி மாலடி யார்களைக் காணக்
கூசமில் லாமல் ஜனுயியை யிங்கே கொடுவரு கென்றனன் கூற. (ஈஅ)

அடியவர் கேட்டுத் தாய்க்குரை செய்ய வவள்மரு மகட்குரை செய்யக்
கடிதிரா ஜாயி வெளியிலே சாண மிறித்துறு ஜனுயிக்குக் கழறப்
படிறறு ஜனுயி கால்கரஞ் சுத்தி பண்ணினள் விரைந்துவந் தங்கே
நெடிதம ரன்பர் குழாத்திடை யிருந்த நிமலனைக்கண் டடிபணிந்தாள். (ஈக)

நின்றவப் போது ஞானதே வென்போர் நிறைருண நாமரை நோக்கி
இன்றுள தான வதிசயங் கேளீ ரெம்பிரான் ஜனுயிபா லுவதை
கன்றினி தெழுதிக் கொண்டுறு வதினை நான்கண்டு வந்தன னென்ன
மன்றலக் துளவோ னுனெழு துவதால் வந்ததோர் குறையென்னை யென்றான்.

பின்னரு மெனக்கு ஜனுயிசொல் வதெலாம் பெரியதோ ரின்பத்தைத் தரலால்
கன்னரங் கெழுத லாயின னதனை நவிலுவோர் கேட்பவர் தம்மேல்
முன்னரன் புடையே னுகிப்பின் தருவேன் மோக்கமு மெனவவன் மொழியத்
தன்னரு கிருந்த தொண்டரொல் லோருந் தனித்தனி கிரித்தனர் மாதோ. (ஈக)

ஜனுயியை நோக்கி ஞானதே வென்போர் தங்குமிங் நாமதே வென்போர்
மூனுளிர ணியற்கு மைந்தனுய்ப் பின்பு மூரணிய வாவிக்கு மகனுய்ப்
பினுளிலுத் தவராய்ப் பாண்டரெங் கனுக்குப் பெரிதன்ப ராயினர் நீதான்
இனுளென வுரைத்தி விமலனுக் கன்பா யிருத்தலின் காரண மென்னூர். (ஈஉ)

பத்தவ தாரஞ் செய்தவனுன பரமனர்ச் சாவுதா ரத்தும்
உத்தம ஞகி யுறைதலால் யானு முடனுடன் றேன்றிவந் தும்றேன்
இத்தனை தானென் றியம்பலு ஞான தேவென்போ ரின்பொடு கேட்டு
மெய்த்துள மகிழ்ந்தார் பின்புபாண் டெங்கன் மெய்யடி யவர்க்குரை செய்வான்

நீவிரொல் லோரும் பாடுமெய்க் கவிக ணிலேபெற வெழுதுகி றதற்கு
மாவிர குள்ளோர் தம்மையான் வருப்பேன் உழுவிலா ஞான்தே வியம்பும்
பாவினைச் சச்சி தானந்தர் நிவர்த்தி பாட்டினைச் சோபான தேவர்
மேவிய முக்தா பாயிதன் கவியை ஞானதே வெழுதவும் விதித்து. (ஈச)

பரமவா னந்தர் பாடலை விசோபா கேசரர் சாவந்தியாமா
ளரகவி சிவாகு ரவர்கூர்ம தாசர் நன்கவி யாவையுஞ் சுதேஷர்
அரமிய சோகா மெளர்தந் தொடர்பை யனந்தபட் டராகவு நாம
வரமிகு நூக்கும் ஜனுயிதன் யாப்பும் வகாகுவன் யானென வகுத்தான். (ஈஙி)

அங்குள ரான வன்பொல் லோரும் ஜயினையை புகழ்ந்தன ராகப
பொங்கிய வுவகை கொண்டுள நாம ரன்பரைபபூசனைபுரிந்து
மங்களஞ் சொல்லப பாண்டுரங் கனுக்கு மாதவன் கோயிலுக் கெழுந்து
தங்கின னுருக்கு மணிக்கிவை யுரைக்கத் தாசாதந தமதிடஞ் சாதகா. (ஏசு)

ஜனபாயி திருவடிகளே சரணம.

ஆக கதை கடை-கரு செய்யுள் ஈரஉஅ.

முற்றிற்று.

மச்சேந்திரநாதர் சரித்திரம்.

சங்கரனெரு நாள்பாற் சாகரதீ ரத்தில
மங்கையொடினி துற்று மகிழ்தருகிற ராமன்
தங்கருளுரு வத்தைத் தனதுளமுற வைததுப
பங்கமிலவ னுமமபகர்தருமவ னுனன். (எ)

அதுதெரிபரை யான வம்பிகைபதி யான
விதுவணிமுடி யானை வேண்டினளுனை மிக்க
தெதுவுளதொரு தெய்வ மெனவினவலு மன்னன்
கதுமெனரகு ராமன் காரணமுரை செய்வான. (உ)

பிரமனெமுத லாகப் பேரிமையவ ரோடே
அரனெனவுள யானு மாவதுமவ னுலே
திரனிலையித னுலே ஷேரிதிரு நாமம்
பரவுவெனவ னீலப் படிவமுமுளம் வைபபேன் (ரு)

என்றதுவின வுற்ற விம்மலைமக டேர்ந்து
நன்றது ஞகத்தி னண்ணியுமிது காறும்
ஒன்றதுதெரி யாம னுறைவதுதக வாமோ
இன்றதுமொழி கிற்பா யெனவிரசித வெற்பான். (ச)

பண்ணிவுடனெதிர் நிற்கும் பார்வதிதலை மேற்கை
அண்ணிவுடனுப தெச மறைதருகிற போது
துண்ணிவுறுனே லின்றிச் சோர்துயிலது மேவ
மண்ணிதருகடல் மீனின் வயின்மகவும் மென்றே. (ஞ)

சிவனருளுட தேசஞ் செலிகொடுவின வுற்று
கவுரவுரு வாகி நண்ணியவது கண்டு
திவமிகவுறு மச்சேந் திரனெனுமொரு நாமம்
பவனிலகுற நல்கிப் பார்வதியொடு போனன். (சு)

அம்மகவுட னேயீ சானனதரு ளாலே
செம்மைகொள்வை ராக லிலமென்மேலாகி
வெம்மயலது வின்றி மேவிரிரு நாமம்
தம்மணிநா வோதத் தனிதிரி தரலானுர் (எ)

தாய்வயிறது விட்டுத்தாம் வருகிற போதே
மேயினஹம் சோஹம் விடுகிலரத ஞலே
ஓய்வருதிரி காலமும்முணர்தரு சக்தி
ஆயினர்யா ராலு மரிவருநிலே யுற்ருர் (அ)

அகலிடமுள தீர்த்தம் யாவையுமே மூழ்குந்
தகவுறுநினே வோடு தாம்வருமூர் தோறும்
நுகர்தரலிர வூணுய் நோன்பது செயல் காடாய்
பிகவயதீ ராறு மேவினர்வரு நாளில். (கூ)

ஒருதினமோ ரூரிலோர்தனவணி கன்வாழ்
தருமனேமூன நின்று சாற்றினரா லக்கென்
றருமைகொ ளொலி கேளா வம்மனேயுரா கிற்பாள்
இருகாநிறை பீச்சை யேந்தின ளெதிர்வந்தாள். (ஙு)

வந்தவளெதிர் நிற்கு மாதவர் தமைநோக்கி
அந்தமிலுப சாரத் தஞ்சலிபல செய்து
நிந்தையிலுரு வத்தீர் நீரிவண்வரு மாயான்
எந்தநல்வினே செய்தே னென்றுருகின ளன்பால். (ஙச)

அன்புறவெதிர் நின்றீ ராதலி னடியேற்கோர்
துன்பிலமக வில்லே யெனுமொருதய ரன்றி
நன்பொருளுணர் கிற்கு நற்றவமுகி யோரே
இன்புடனருள் செய்வீ ரென்றரிசியை யிட்டாள். (ஙஎ)

அன்றவளுரை செய்யு மன்புறமொழி கேளா
மன்னினதவ யோகர் மற்றவள்முக நோக்கி
நின்னிடமக வண்டா நீயிது பெறுகென்று
நன்னிற முளநீறு நல்கினருரை செய்வார். (ஙரு)

நீயிதையுண் பாயே னின்வயி னெடுமாறன்
தூயகலம் சத்தாற் ரோன்றுவன்மக வென்றே
ஆயவரகல் வுற்ரு ரானபி னம்மாது
போயயல் மனேயாரோப் புகவகம்வரு வித்தாள் (ஙச)

வருமவடனே நோக்கி மானனவிழி யாளே
ஒருதுறவின நிங்கே யுற்றனர்பெறு பிச்சை
தருதல்செய்தவர் தம்மைச்சந் ததியருள் கென்றேன்
அருளினர்திரு நீற்றை யயில்கெனவவர் போனர் (ஙஙி)

ஸ்ரீ பக்தலீலாமிர்தம

காணுணநினை கின்றே னவிலுநினினை வென்ன
மீனுறழ்விழி யன்னள் வேண்டலிதிரு நீறு
தானுணவுத விப்பின் தம்வசம்வரல் செய்வோ
ராணுணர்வது மாறி னுர்பலரறி யென்னுள். (கசு)

அவளுகாகொடு நீயி லன்னதை யிட்டாள்பின்
கவமுடனெரு மூன்று கண்ணின வாண்டாக
உவமையின்மச் சேந்த்ர நாதருமுவ ணுற்ருர்
இவள்மனையிலும் வந்தே இடுகென வெதிர நின்ருர. (கஎ)

மற்றவளிடு பிச்சை வாங்கினாமுக நோக்கி
அற்றையினினை வண்டா யரிவைநின்மக னெங்கே
இற்றையெனெதிர் காட்டு கென்றனரவ ளஞ்சிச்
சொற்றருகில ணின்ரு ளுள்ளது சொல்கென்ருர. (கஅ)

மாதவரே நீற்ருல் வஞ்சனை யுளதென்றே
ஓதயன்மனை யாளா ளுளவடுப புறுகீயில்
மேதகுதிரு நீற்றை யிட்டனன்வெரு ளன்மின்
ஏதமிதென வென்ரு ளெதிர்த்துறவினா சொலவார். (கக)

நீறிடுபெலி யெங்கே நீயிடுமிட மென்ன
மாறிலன்பனி ரண்டு வருடமுமிடு சாம்பர்
வீரெருருகுழி யுண்டென் றக்குழியிடை மேவ
ஆறினர்தமை யுய்த்தா ளன்னவரவ ணின்றே (உபு)

அதிர்தரவா லக்கென் ரூரதுவின வுற்று
முதிர்குழியிடை நின்று முங்கினதா தேசென்
றெதிரொலிகுரு சாமி யென்பதொடது கேளாப்
பொதிரதிசய ராகிப பொங்கினரு ருள்ளார் (உக)

அவ்வயின்மச் சேந்தர ரானவர்வணி கன்றன்
செவ்வியமனை யாட்குச் செப்பினராட் கூட்டி
இவ்வயினுறு குப்பை யெடுமெனவெடுப் பிக்கத
தீவ்வியவரு வோடு சேயுறுவது கண்டார் (உஉ)

பன்னிருவய துள்ள படிவமொடுரு யோகு
மன்னினர்படி மீது வைகுதலில ராக
மூன்னுறுவது கண்டு மூற்றியதவ யோகர்
சென்னியின்மிசை யத்தஞ் சேர்த்தினர்நிலதே (உரு)

அக்குழியிடை யுற்ரே ரப்பொழுதெழ லுற்றுத்
தக்கவரிரு தாளிற் ருழ்த்தலுகா மந்தான்
தொக்கதொர்பலி கின்றுங் தோன்றினரத னுலே
மிக்கதொர்கோ ரக்க ரென்றனர்வினை தீர்ந்தார் (உங)

வேறு.

குழியினின்றும் வெளியில்வந்த கோரக்க நாதர்தமைக் கூட்டிக்கெண்டு
பழியிகந்த முனிவர்செல்லப் பார்த்ததன வணிகன்றன் பாரிதன்னை
மொழிகடந்திரு னனசெய்தா யெனவெறுக்கப் பெரியதவ மோனர்கண்டு
வீழியினருள் சுரந்துமக்கு மகனுண்டா மெனவாழ்த்தி மேவி னரே (உடு)

போம்பொழுது கோரக்கர் மச்சேந்திரர் தமைப்பணிந்து பொருந்தெனக்குத்
தாம்பதுமக் கரமெனது தலைவைத்துத் தாரகமந் திரத்தைச்சாற்றி
மேம்படுத்து கெனவேண்ட மச்சேந்தர நாதருடன் விளம்ப லில்லார்
ஓம்புகுரு சேவைசெய்தாற் பின்புதெரிந் துபதேச முறுதி யென்றார் (உசு)

நன்றென்று கோரக்கர் நவில்குருவின் முள்வணங்கி நடந்து கூடச்
சென்றங்கோர் நகரத்தின் புறத்திருந்து பிச்சைகொண்டு சேர்கோ ரக்கா
என்றந்த மொழிகேட்டுக் கோரக்கர் மனைகடொறு மிரந்து சென்று
முன்றுன்று பிராமணபோ ஜனமனைமு னுலக்கு மொழிந்து நின்றார் (உஎ)

அம்மனைவாழ் பார்ப்பினியச் சொற்கேட்டு வடைபோளி யதிர சம்பை
விம்மநிறைத் தலுங்கொண்டு மேவிவெளிப் புறத்திலுறு விமல ருக்குத்
தம்மனதன் புடன்கொடுக்கத் தாமுண்டு சந்தோஷந் தழைப்ப தாகி
இம்மதர வடையெனக்கு ருசியாகி யிருத்தலா லினமும் வேண்டும். (உஅ)

நானேக்குங் கொணர்கவெனக் கோரக்க ரப்படியே நகருட் சென்றிவ்
வேனேக்குந் தரல்வேண்டு நேற்றளித்த வடையென்ற வினவக்கேட்டு
வானேக்கு நிகர்விழியா ளின்றேது தானியநீ வாங்கு கென்னக்
கானேக்கு நிகர்சிறுவர் குருவுக்கு வேண்டுமது கடிதீ கென்றார் (உக)

அதுகிடையா தெதுவேண்டு மாயினும்யான் தருவலென வன்னஞ் கூற
எதுவளித்தா லும்வேண்டே னிகலியேற் போகிலனென் றிவருங் கூற
மதுமலர்சூழ் குழலினவள் மாதவமே டங்கொண்டு வருகின் றோருக்
கிதுதெரியா தோ விலதிங் கெங்கிருந்து வருமென்றே யிகன்றுசொல்வாள் (ஈ)

உன்கண்ணைக் குருவினவிற் றருவாயோ தரத்தக்க துளதேல் யானும்
நின்கண்வடை தரத்தக்க நிப்போதென் றுரைசெய்ய நிமலர் கேட்டு
நன்கணுணைப் பறித்தவர்க்கு நல்குவதை யுனக்கீவே னென்று நல்கப்
புன்கணுடன் பயந்தவளு மவர்விழிவார் செந்நீரைப் போக்கிநின்றாள். (ஈக)

தயசாந்தி வைராகந் தாங்கிநின்ற கோரக்கர் தம்மு னின்று
பயநீளும் பார்ப்பனியை யஞ்சேனீ வடைசெய்து பரிந்தீ கென்னும்
நயமான மொழிகேட்டு விளாவினெய்யிற்செய்ததனே நல்கலோடும்[ட்டார். (ஈஉ)
துயர்தீர்தி யென்றுளாத்தோர் கரத்தாற்போம் விழிமறைத்துச் சோரார் மீண்
வந்துகுரு வடிவணங்கி வடைபுசித்தி ரெனமூன்பு வைக்கக்கண்டங்
கெந்தவிதத் தாலுனது கண்போன தெனவுள்ள தியம்ப லோடும்
இந்தநெடுந் தீரமரி தெனக்குமற்றைக் கண்ணுதவு கெனக்கோ ரக்கர்
அந்தவிழி யையும்பறித்து முன்வைக்க மச்சேந்தர ரதிச யித்தார் (ஈங)

உடனேகல் லன்பனென வுகந்தவனைத் தடவிவிழி யுடைய ராகித்
திடமேவு மான்மஞ்ரா னைத்தன்னே யுபதேசஞ் செய்தரு ணுண்டார்
மடமேவு மயலிகந்த கோரக்கர் தமக்குமிச்சில் வாய்ப்ப நல்கித்
தடமேவு சீடனுனைப் போலெனக்குக் கிடைப்பரிது ஜகத்தி லென்றார் (ஈச)

கோரக்கர் சாம்பவரத் துவயர் பிர பாவர் கைனி யர் நிவர்த்தர்
போரப்பொங் கியஞான தேவர்விசோ பாநாமர் புகல்ஜ னுயி
சிரொத்த விவர்க்ளொரு வருக்கொருவ ருபதேசஞ் செய்யப்பெற்று
நேரொத்த வான்மஞானம் புவியிற் பரம்பரையாய் நிலவிற் றம்மா (ஈடு)

மச்சேந்திரநாதர் திருவடிகளே சரணம்.
ஆக சரித்திரம் ஐடு-க்கு செய்யுள் தூசுஉங.
முற்றிற்று.

கோபிசந்தராஜன் சரித்திரம்

உத்தரகண் டத்துளே கௌடபங் கா லென்னு மிராச்சி யத்துள்
சித்திரகாஞ் சனபுரிக்கோ ரரசனுந் திரிலோக சந்த னென்னும்
அத்தருசீ ரரசன்மிக வும்பிர தா பசாலியா யாண்டு வந்தான்
சத்திய ஞயவிவன்றன் பட்டமனே யாளழகு தனிற்சி றந்தே. (க)

நற்குணநற் செய்கைகள்யா வும்பொருந்தி னவளாமை ஞவ தித்கு
மிக்குளரூ பலாவணிய மிருந்தமகன் கோபிசந்தன் மேவு நாளில்
தக்கவவன் பிதாவான திரிலோக சந்தென்போன் சாத லாக
பிற்குழந்தை யாகியகோ பிசந்தனர சாளுங்கா லத்தின் மாதோ. (உ)

ஆயிரத்தோ டிருநூறு மனவிகளே விவாகஞ்செய் தமர்ந்தும் போகம்
தோய்தலுக்கோ ராயிரத்தோ டறுநூறு தோகையர்கா டகசா லேக்கண்
மேயிருக்க வைத்திராப் பகற்சகல விபவமுடன் விடயா னந்தம்
தேய்தலின்றி யனுபவித்து வந்தான்ரு யாமைஞ வதிசீர் சான்ற. (ங)

பதிவியோ கத்தினுன் மிருந்தவயி ராகமுற்றிரூர் பகன்மேன் மாடம்
அதிலேறி யுதாசீன மாய்நான்கு திக்கிலும்பார்த் தமரும் போது
நிதிமேவு மங்கரத் திற்சகல சித்திகளு நிறைவு கோர்ந்த
விதிமேவு மாசாபா சங்கள்கன விலுநினையா வான்ம ஞானி. (ச)

ஆகியரி தன்னையிடை விடாமற்றியா னித்திவெ ராயும் பிச்சை
வாகொடெடுத் துண்பவரா யும்விகார சீலமுள வராயுஞ் சால
யூகமிரு தயைசாத்து விகமுடைய ஜாலந்த ரக னற்றற்
கேகியா ரணியத்திற் சென்றலர்ந்து கிடக்கும்விற குகளை தித்து. (ஞ)

கட்டாகக் கட்டித்தந் தலியேற்றி வழிநோக்கிக் கடுகும் போது
கிட்டாத விவர்தேக நிழற்பூமி யிற்கினா ரிந்த னங்கம்
ஒட்டாதோர் முழத்துக்கு மேல்விறகு கட்டுவரு முதனோக்கி
எட்டாத வாச்சரிய மிதுவென்னே யென்றுகைத் திந்த மாது (ரு)

இவரோமா னிடரல்ல ரிறையவனே யெனநினைநதிங் ஙிவரொ னக்குப்
பவரோகந் தீர்த்தருள்வா ரெனத்துணிந்து மானவெட்கம் பலவு நீத்தே
அவர்தாளே சரணைனவேண் டியதென்றங் கவர்மேவு மடத்தை நோக்கித்
தவர்பாதந் தனக்குபசா ரம்புரிய வேண்டுவன தருவித் தேக. (எ)

